விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 5 ஐ. ஆகி 7 இதழ் 7
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17-2-1986

● குறிஞ்சாத்தீவில் நேற்று அதிகாலை நடந்த மோதல்

# 52 ராணுவப் பலி: 'ரெலோ' அறிவிப்பு

# 2 மட்டும் என்று அரசு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாமுக்கு அருகிலுள்ள குறிஞ்சாத்தீவில் நேற்று அதிகாலை இராணுவத்தினருக்கும், போராளிகளுக்குமிடையே ஏற்பட்ட சமரினால் கொடிகாமம் முதல் கிளிநொச்சி வரை பெரும் பதற்றம் நிலவியது. இப்பகுதியில் நேற்று போக்குவரத்தும் தடைப்பட்டது. நேற்றைய 'மோதல்' சம்பந்தமாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் ஐம்பத்து இரண்டு இராணுவத்தினர் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் நேற்றைய மோதலில் இரண்டு இராணுவத்தினர் பலியானதாகவும், நான்கு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளது.

தமிழ் ஈழவிடுதலை இயக்கம் [ரெலோ] நேற்று விடுத்த அறிக்கை விபரம் வருமாறு:

16-ம் திகதி அதிகாலை 4-15-க்கு குறிஞ்சாத்தீவில் இராணுவத்திற்கும் எமக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 52 இராணுவத்தினர் பலியானுர்கள்.

எமது முகாமொன்றை சுற்றிவளைக்க முற்பட்ட அரச பயங்கரவாதிகளே அழிக்கப்பட்டனர். ஒரு இ எல். எவ். றக், 2 கவசவாகனம். ஒரு இ. போ. ச, பஸ்ஸிலும் எம் முகாமை நோக்கி வந்தவர்களே இவர்கள். இ. எல். எவ். றக்கில் 15 பேரும், இரண்டு கவசவாகனத்தில் 40 பேரும் இருந்துள்ளனர். மோதல் நடைபெறும் சமயம் நான்காவதாக வந்த இ. போ. ச. பஸ். ஆனையிறவு முகாம் அருகிலேயே நின்று விட்டது. முன்னால் வந்த மூன்று வாகனங்களும் முற்றாக சேதமாக்

[5-ம் பக்கம் பார்க்க]

## மடுவீதிச் சம்பவம்: விடுதலைப் புலிகள் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

மன்னருக்கும் முருங்கனுக்குமிடையிலுள்ள மடுவீதியில் ஊர்ந்துசென்ற 18 இராணுவ வாகனங்களை நோக்கி மறைந்திருந்து தாக்கியதில், ஒருஜீப்வண்டி முற்றாகச் சேதமடைந்ததாகவும் அதிலிருந்த ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' விடுத்துள்ள

(5-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிப் பிரயோகம்: வவனியாவில் ஒருவர் பலி!

[வவனியா]

வவனியா தாண்டிக்குளத்துக்கும் சாஸ்திரி கூளாங் குளத்துக்குமிடையில் நேற்று மாலை மோட்டார்சைக்கிளில் சென்ற ஒருவரை நோக்கி ஆயுதப்படையினர் துப்பாக்கியால் சுட்டதில் அவர்பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்புச்சட்டை அணிந்த ஆயுதப்படையினர் கவச வாகனங்களை மறைவொன்றில் நிறுத்திவிட்டு மறைந்திருந்ததாகவும் குறிப்பிட்ட நபர் மோட்டார்சைக்கிளில்அப்பாதைவழியாக வரவே ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், சூட்டுக்காயத்துடன் மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு அந்நபர்

[5-ம் பக்கம் பார்க்க]

## தென்மராட்சி கிழக்கில் ஹெலிகொப்டர் தாக்குதலில் குழந்தை, பெண் உட்பட நால்வர் பலி!

### 15 பிரயாணிகளுக்கு காயம்

[ஐ. சண்முகலிங்கம், கே. வி.கே. திருலோகமூர்த்தி]

தென்மராட்சி கிழக்கில் எழுதுமட்டுவாள், ஒட்டுவெளி, முகமாலைப்பகுதிகளில் நேற்றுக்காலை நடந்த ஹெலிகொப்டர் தாக்குதலில் மினிபஸ்ஸிலும், காரிலும் சென்ற நால்வர் பலியானுர்கள். 15 பேர் காயமடைந்தனர்.

மினிவான் சாரதி நமசிவாயம் சிவானந்தன், மினி பஸ்ஸில் சென்ற வயோதிப மாது, பொன்னன் குணராசா (7 வயது), கார்ச் சாரதி வேலா

[5ம் பக்கம் பார்க்க]

## "மினிபஸ்மீது சரமாரியாக சுட்டனர்"

[யாழ்ப்பாணம்]

''முகமாலை கொற்பிட்டி ஏற்றத்தில் மினிபஸ் சென்று கொண்டிருந்தபோது ஹெலிகொப்டர் திடீரென மிகவும் தாழ்வாகப்பறந்துவந்து நாம் பிரயாணம் செய்து கொண்டி

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் 8 பேர் அனுமதி!

[யாழ்ப்பாணம்]

முகமாலை ஏற்றத்தில் நேற்றுக்காலை ஹெலிகொப்டரிலிருந்து சுடப்பட்ட சமயம் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில், திருவானந்தமூர்த்தி [எழுதுமட்டுவாள்], எஸ். லிங்கம் [மிருசுவில்], வி. ராஜன் ஆகியோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாளையடிபகுதியில் நேற்றுக்காலை ஹெலிகொப்டரிலிருந்து சுட்டபோது காயமடைந்த நான்குபேர் நேற்று மாலை யாழ் ஆஸ்பத்திரியில் அனும

(5-ம் பக்கம் பார்க்க)

## 'யாழ்தேவி' வந்து திரும்பியது

[யாழ்ப்பாணம்]

'யாழ்தேவி' ரயில் நேற்று சுமார் 15 நிமிடம் தாமதித்து யாழ். ரயில் நிலையம்வந்து கொழும்பு திரும்பிச் சென்றது. [க]

## தாயும் மகளும் கைது!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் புளியங்குடாப்பகுதியில் உள்ள ஒரு வீட்டை நேற்றுக்காலை சுற்றிவளைத்த ஆயுதப்படையினர் அவ்வீட்டிலிருந்த தாயையும் மகளையும் கைதுசெய்து முகாமுக்குக்கொண்டுசென்றனர்.

செபமாலையம்மா [40வயது] இருதயமேரி [6 வயது]ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணின் கணவர் அம்பாறையில் கடமையாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## ஐ. நா. சபையின் முன்பாக தமிழர் ஆர்ப்பாட்டம்!

(நியுயோர்க்)

நியுயோர்க்கில் ஐ. நா. சபைக்கு முன்பாகவும் மற்றும் 10 இடங்களிலும் அங்கு வாழும் தமிழர்கள் கடந்த வெள்ளிக்கிழமை அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தினுர்கள்.

நாற்பதுக்கு மேற்பட்ட தமிழர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். இலங்கையில் தமிழர் படுகொலைசெய்யப்படுவதைக் கண்டித்து இவர்கள் போராட்டம் நடத்தினர்.

## பெனிலொப் வில்லிஸ் விவகாரம்: செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி இன்று யாழ் வருகிறுர்

[கொழும்பு]

'ஈரோஸ்' இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்ட பிரிட்டிஷ் பிரஜையான திருமதி பெனிலோப்வில்லிஸ் (வயது64) இன்று யாழ்ப்பாணத்தில் வைத்து பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டனிலிருந்து பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த செல்வி பன்ட்ரா பிங்

(5-ம் பக்கம் பார்க்க)

## குண்டுவைத்து தகர்ப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு - மண்டபத்தடி கமநல சேவை நிலையக் கட்டடம் நேற்றுக்காலை குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்

(5-ம் பக்கம் பார்க்க)

## மயானத்தில் காணப்பட்ட அரைகுறை சடலம்

[மட்டக்களப்பு]

ஆயுதப்படையினரைக்கண்டு ஓடியவர் உயிர் தப்பினுர். நின்றவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானுர்.

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

NEL FARM பிறவுண் சேவற்குஞ்சுகள் 18-ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 769]

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதி 106ஆம் இலக்க வீடு, முக்கால் பரப்பில் அரைவாசி கட்டிடப்பகுதிவிற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். (C 814)

## மின் துண்டிப்பு நீங்கியது

[இறுப்பிட்டி]

புங்குடுதீவு பகுதியில் சில நாட்களாக துண்டிக்கப்பட்டிருந்த மின்சாரம் மீண்டும் வழங்கப்படுகின்றது. சட்டவிரோத - மின்பாவனை அதிகரிப்பினல் மின்சாரம் துண்டிக்கப்பட்டு நகரம் இருளில் மூழ்கியிருந்தது. இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு புங்குடுதீவு மின்பாவனையாளர் சங்கம் மேற்கொண்ட முயற்சியினல் மின்சாரம் மீண்டும் வழங்கப்பட்டது.

பெண்களுக்கான 9 மாத கால மனையியல் வகுப்புக்கள் யாழ் நகரின் பிரபல ஆசிரியைகள் மூலம் தினசரி பயிற்றுவிக்கப்படும். இத்துடன் இலவச ஆங்கில வகுப்புகளும் நடைபெறும். பயிற்சி முடிவில் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். தொழில புரியும் பெண்கள், மற்றும் பாடசாலை மாணவிகளின் வசதிகருதி ஞாயிறுவகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு:- [G S Ladies' Academy (Regd), No: 57, Victoria Road (சுபாஸ் ரூரிஸ்ட் ஹோட்டல் அருகாமை) யாழ்ப்பாணம். T Phone: 22365. (C 821)

வயறிங், வெல்டிங், ரேடியோ அன் ரீ. வி. மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைண்டிங் - புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. மிகக் குறைந்த சட்டணம். சான்றிதழ் பெறுமதியானது. தொடர்பு; VISPA ENGINEERING 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 740


## தேவை

எமது அச்சகத்திற்கும், பிரசுர நிறுவனத்திற்கும் பங்காளராக விரும்பும் கலை, இலக்கிய ஈடுபாடுள்ள ஊழியர்கள் தேவை. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். முகாமையாளர், ''தங்கஸ்தான்'', சுன்னுகம். (C 800)

## தேவை

· 'டெமிகாவ்' அளவுள்ள நல்லநிலையிலுள்ள பிளேட்டன் அச்சுயந்திரம் தேவை. அனுபவமுள்ள கம்போசிட்டர்களும், மெஷின் மைன்டரும் தேவை. அச்சகத்திற்பங்காளராகவிரும்புவோரும் தேவை. விண்ணப்பிக்கவும்: முகாமையாளர், ''தங்கஸ்தான்'', சுன்னுகம். (C 799)

## ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வன் சுப்பிரமணியம் செல்வராஜ் (ராஜா)**

(மாவிட்டபுரம் வீமன்காமம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவன்)

**அன்னை மடியில்: 17-9-1960**

**ஆண்டவன் அணைப்பில்: 28-2-1985**

**திதி: 17-2-1986**

எங்கள் குடும்பத்தின்
அன்புத் தீபமே! ஒளி
விளக்காயும், வழிகாட்
டியாகவும், திகழ்ந்து
எங்களை ஆறுத்துயரில்
ஆழ்த்திவிட்டு மீளாத்
துயில் கொண்ட தெய்
வமே!
விண்ணுலகம் நீ சென்று
ஓராண்டு ஆனுலென்ன
மண்ணைவிட்டு நாம்
வரும்போதும் மாறுது
உன் நினைவு
பூமாலை சூட்டி உன்புகழ்
பாட ஆசைகொண்
டோம்
பாமாலை சூட்டி உனக்கு
அளிக்கின்றோம்
சமர்ப்பணங்கள்.
சாந்தி சாந்தி சாந்தி

பிரிவுத் துயரால் வாடும்
**அம்மா, ஐயா, அண்ணன்மார், அக்காமார், தங்கை, அத்தான்மார், மருமக்கள், மச்சாள்மார், மாமாமார், மாமிமார்.**
மற்றும்உற்றூர்உறவினர், நண்பர்கள்.

''துர்க்காபுரி''
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

C 790

## தசாக அழைப்பு



**திருமதி இ. பாக்கியம்மா**

சுழிபுரம் பறுளையைச் சேர்ந்தவரும் கிளிநொச்சி வட்டக்கச்சியில் வசித்தவருமான திருமதி பாக்கியம்மா இராசரத்தினசர்மா கடந்த 9-2-86இல் இறைவனடி சேர்ந்ததை முன்னிட்டு, அன்னாரின் தசாகக்கிரியைகள் நாரந்தனையில் நடைபெறும். அனைவரும் கலந்துகொள்ளும்படிவேண்டுகிறோம்.

18-02-86 செவ்வாய் தசாகம், 19-02-86 புதன் மாசியம், 20-02-86 வியாழன் சபிண்டீகரணம், 21-02-86 வெள்ளி கிரகயக்ஞம், சமாராதனை.

இப்படிக்கு
சு. இராஜரத்நசர்மா (கணவன்),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தான்தோன்றி
அம்மன் கோவிலடி,
நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.
(C 812)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி செல்லம்மா சிவகுருநாதர்**

கொக்குவில் கிழக்கு

**தோற்றம்: 05-04-1901**

**மறைவு: 19-01-1986**

அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவி, அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை 18-02-86 செவ்வாய்க்கிழமை ''ரட்ணவாசா'' கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

க. சி. தாமோதரம்பிள்ளை,
க. சி. கனகலிங்கம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
[illegible]
C 800

## தேவை

### அச்சு உபகரணங்கள்

பாவித்த ரைப்கேஸ்கள், ஸ்ரான்ட், வேறு அச்சு யந்திரசாலைக்கு ஏற்ற உபகரணங்கள் விற்பனைக்கு நல்லநிலையில் இருப்பின் நேரடியாக தொடர்புகொள்ளவும்.

**வே. ஸ்ரீஸ்காந்தா,**
சிவன் மாளிகை லிமிட்டெட்,
கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23837. C 806

# மத்தியகிழக்கு நாடுகளில் மாணவர்கள் நிலை

[யாழ்ப்பாண[illegible]]

''எண்ணெய் வளம் மிக்க குவைத்நாட்டில் மாணவர்கள் மிகவும் டாம்பீகமாக வாழ்க்கை நடத்துகின்றுர்கள். பல வீடுகளில் தனித்தனிகார்களில் வரக்கூடிய வசதி இருக்கிறது. இலங்கையில் மாணவர்களுக்குச் சைக்கில் போன்றுதான் அங்கு கார்களும். அதுவும் குளிரூட்டப்பட்ட கார்களில் தான் பாடசாலைக்கு வருவார்கள். ரிவியும், டெலிபோனும் கார்களில் பொருத்தப்பட்டிருக்கும். இங்கு அராபியர்கள் தமது பிள்ளைகளை உயர்கல்விக்காக லண்டன், அவுஸ்ரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்புவது சர்வசாதாரணம். கல்லூரிகள் மிகவும் அழகாக இருக்கும். ஆங்கிலக் கல்வியில் இவர்களுக்குநாட்டம் அதிகம். ஆங்கிலம் தெரியாத நமது நாட்டவர்கள் விமானப் பயணத்தின் போது வேண்டிய பத்[illegible]ங்களை நிரப்பமுடியாமல் படும் [illegible]வலங்களையும் அதைப்பார்த்து அராபி[illegible]ளும், விமானப் பணிப் பெண்களும் சிரிப்பதையும் நான் அவதானித்தேன். மாணவர்களாகிய நீங்கள் ஆங்கில அறிவைப் போதியளவு வளர்த்துக் கொள்ள வேண்டும்.''

இவ்வாறு நாவலாசிரியர் நெல்லை க. பேரன் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி மாணவர்கள் மத்தியில் 'மத்திய கிழக்கு நாடுகளில் மாணவர்கள்' என்ற பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் கூறினர். உயர்வகுப்பு மாணவர் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்திற்கு மாணவர் மன்றத் தலைவர் திரு. நா பாஸ்கரன் தலைமை வகித்தார்

சிறப்புச் சொற்பொழிவினைத்தொடர்ந்து அண்மையில் வெளியிடப்பட்ட நெல்லை க. பேரனின் 'விமானங்கள் மீண்டும் வரும்' என்ற குறுநாவலும் மாணவர்கள் மத்தியில் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது. மாணவர் மன்றச் செயலாளர் திரு து இராதாகிருஷ்ணன் நன்றி கூறினர்.

## தவக்காலச் சிந்தனை



6ம் நாள்

''பசியாய் இருந்தேன், எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன், எனக்கு குடிக்கக் கொடுத்தீர்கள். அந்நியனுய் இருந்தேன், என்னை வரவேற்றீர்கள் ஆடையின்றி இருந்தேன், என்னை உடுத்தினீர்கள். நோயுற்றிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் சிறையில் இருந்தேன், என்னைக்காண வந்தீர்கள்'' (மத் 25/35 - 36).

என்ற கிறிஸ்துவின் கூற்று பிறரோடு கொள்ளுகின்ற நியாயமான அன்புறவு இறைவனிலே நிறைவு பெறுகின்றது என்பதை எண்பிக்கின்றது.

பிறரது தேவையை உணர்ந்து பிறருக்குச் சேவை செய்கின்றபோது, பிறருக்கு நன்மை பொழிகின்றபோது நான் இறைவனின் பிரதிபலிப்பு என்பதை வெளிக்காட்டுகின்றேன்.

நான் மனிதரோடு நேரிய முறையில் உளவு கொள்ளும்போது, மற்றவர்களது உடல், உள. ஆன்மிகத் தேவைகளில் கரிசனையோடு பங்கு கொள்ளும் போது நான் இறைவனேடு, இறைவனில் சங்கமமாகின்றேன்.

வின்சென்ற் பற்றிக்
அ. ம. தி

### மானிப்பாய் கோயில்பற்று ப நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

மேற்படி சங்கத்தில் 6500 வரையிலான வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. இதற்கான கேள்விகள் 21-02-86 நண்பகல் 12 மணிக்குமுன் ஏற்றுக் கொள்ளப்படும் மேலதிக விபரங்களை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்.**
15-02-86.

(C 256)




## இயங்காத பிரஜைகள் குழு!

[சாவகச்சேரி]

தென்மராட்சியில் இருவருடங்களுக்கு முன்னர் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட பிரஜைகள்குழு எவ்வித செயல்பாடுகளும் இல்லாமல் இருப்பதையிட்டு, இப்பகுதி வாழ் மக்கள் மிகவும் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

இப்பகுதியில் இடம் பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பானவிடயங்களையிட்டேனும் இக்குழுதொடர்ந்து மௌனம் சாதித்துக் கொண்டுவருவது கவலைக்குரியதாகும் என்றும் இக்குழுவுக்குப் புத்துயிர் அளித்து செயல்படவைக்கவேண்டிய அவசியத்தையும், தேவையையும் கருத்தில் கொண்டு சில முன்னேடிகள் முயற்சிசெய்து வருகின்றனர் என அறியப்பகின்றது.

## இல்ல விளையாட்டுப் போட்டி

(அளவெட்டி)

அருணேதயாக் கல்லூரி மாணவர்கட்கிடையிலான இல்ல விளையாட்டு போட்டி எதிர்வரும் 26ம் திகதி நடைபெறவிருக்கின்றது. இவ் விளையாட்டுப் போட்டியில் வட்டாரக்கல்வி அதிகாரி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## மீண்டும் பதற்றம்

[கிளிநொச்சி]

உருத்திரபுரத்தில் மீண்டும் பதற்றநிலை உருவாகியுள்ளது.

இராணுவத்தினர் அண்மையில் அங்கு செல்ல [illegible]ட்ட போதே இந்த பதற்றம் உருவாகியது.

எதிர்தாக்குதலும் இடம் பெற்றதாகவும் அதனுலே இராணுவம் பின்வாங்கியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை விமானங்களும் அப்பகுதியில் வட்டமிட்டன; குண்டுச்சத்தங்களும் அப்பகுதியில் கேட்டன.

இது இவ்வாறு இருக்ககடந்த சில தினங்களாக பல இளைஞர்கள் கிளிநொச்சிப்பகுதியில் கைதாகி உள்ளனர். கைதானவர்களின் பெற்றேர் பிரைஜைகள் குழு மூலம் அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணமற்போன அமெரிக்க வீரர்கள் வியட்னமில் உயிருடன் உள்ளனர்

[ராய்ட்டர்]

இந்தோ-சீன யுத்த முனையில் காணமல்போய் விட்டார்கள் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பல அமெரிக்க ஆயுதப்படை வீரர்கள், வியட்னமில் இன்னமும் உயிரோடு இருக்கலாமென்று வியட்னம் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புத்தக்கைதிகள் மற்றும் யுத்தமுனையில் காணமல் போன ஆயுதப்படை வீரர்கள் பற்றிய அமெரிக்க காங்கிஸில் ஒன்பதுபேர் கொண்ட குழுவின் தலைவரான ஜரால்ட் சொலமன் வியட்னம் அதிகாரி தெரிவித்த கருத்து வரவேற்கத்தக்கது என்றும, இதனுல் இதுவரையில் தீர்க்கப்படாத பல பிரச்னைகளை தீர்க்கக்கூடியதாக இருக்கும் என்றும் கூறியுள்ளார். வியட்னம் அரசாங்கம் இதுவரையில் ஒருஅமெரிக்க யுத்தக் கைதியைக்கூட வைத்திருக்கவில்லை என்றும் கூறிவந்தது.

வியட்னமின் பல பின்தங்கிய கிராமங்களில் பல ஆயுதப்படை வீரர்கள் இருப்பதனை பொதுமக்கள் பலதடவைகள் கண்டிருப்பதாக பாங்ஹொக்கிலுள்ள அமெரிக்கர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்காசியாவில் இப்போதுகூட ஐம்பது முதல் அறுபது அமெரிக்கர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வியட்னம் யுத்த முனையில் 1797 அமெரிக்க படைவீரர்களும் சாதாரண பிரஜைகளும் காணமல் போயிருப்பதாக அந்நாட்டரசு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. [து]

## பிலிப்பைன்ஸ்:

# தேர்தலை நம்ப முடியவில்லை என்கிறுர் றீகன்!

[வாஷிங்டன்]

பிலிப்பைன்ஸில் ஜனுதிபதி மார்க்கோஸின் ஆதரவாளர்கள் பரவலாக நடத்திய மோசடி, மற்றும் வன்முறை காரணமாக தேர்தலை நம்ப முடியவில்லை என்று அமெரிக்க அதிபர் திரு. றொனுல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

எனினும் பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் வன்முறைகளை தவிர்க்க வேண்டும் என்று அவர் பிலிப்பைன்ஸ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை மோசடி, கள்ள ஓட்டுக்கள் காரணமாக சுமார் முப்பது சதவீதமான வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைக்கவில்லை என்றும்அமெரிக்க அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [து]

## நியமனம்

[பண்டத்தரிப்பு]

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தான யாழ்ப்பாணக்கிளையின் பதில் முகாமையாளராக திரு. க. அப்புத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.

மாதகலைச் சேர்ந்த இவர் கடந்த 24 வருட காலமாக கொழும்பு, வவனியா, மட்டக்களப்பு கிளைகளில் சேவையாற்றியுள்ளார்.

## அறவழிப் போராட்டக் குழு நடவடிக்கை

(சாவகச்சேரி)

மறவன்புலவு அகதிகள் குடியேற்றத் திட்டக் காணியில் சில பொதுப்பாதைகள்அமைக்கும் பணியினை அறவழிப் போராட்டக்குழுவும, சர்வதேச சமாதான சேவை இயக்கமும் இணைந்து சிரமதான மூலம் நிறைவேற்றவுள்ளன.

மறவன்புலவுக் கிராமத்தில் இருக்கின்ற பொதுஸ்தாபனங்களும் இச்சிரமதானப் பணியில் இணையச் சம்மதம் தெரிவித்துள்ளதாக திட்ட உத்தியோகத்தர் திரு. ரி. ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# பஞ்சாப் அரசு கடும் போக்கு!

(அமிர்தசரஸ்)

'பொற்கோவில்வளாகத்துக்குள் அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள், அடிப்படை சீக்கிய நெறிசளுக்கும் பாரம்பரியத்துக்கும முரணுனவை' என்று பஞ்சாப் முதல்வர் திரு சுர்ஜித்சிங் பர்னுலா தெரிவித்துள்ளார்.

'ஒன்று மறியாத மக்களைக் கதிகலங்க வைப்பதற்காக சமயஸ்தலங்களில் ஆயுதங்களை வெளிப்படையாகக் காட்டி மிரட்டுவதற்கு முயற்சி நடக்கிறது என்றும் இவர்களை அடக்குவதற்கு தமது அரசு உறுதியுடன் செயல்படும்' என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [து]

# அ.தி.மு.க.எம்.பி.

## கட்சியிலிருந்து கல்தா

[சென்னை]

அ.இ அ.தி.மு.கழகத்தின் எம்.பி திரு பி.கண்ணன் மேற்படி கட்சியிலிருந்துகட்சிவிரோத நடவடிக்கைகளுக்காக வெளியேற்றப் பட்டுள்ளார்.

இவரை வெளியேற்றியதினுல் லோக்சபாவில் அ இ அ தி. மு. கழகத்தின் வலு பதினென்ருகக் குறைந்து விட்டது. [து]

# "சுற்றுமாற்று தந்திரம் நீடித்தால் பொறுமையை இழக்க நேரிடும்!"

(ராய்ட்டர்)

''இலங்கை அரசு தனது சுற்றுமாற்'றுப் போக்கினைக் கைவிடாத பட்சத்தில் இந்தியா தனது பொறுமையை இழக்கும் நிலைமை ஏற்படும். போர் நிறுத்தம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படாத நிலையிலும் அர்த்தமற்றமுறையில் அப்பாவிமக்கள் ஆயுதப்படைகளால் கொல்லப்படுகின்ற போதிலும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது அசாத்தியம் ''

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி இலங்கைத் தூதுவர் திரு பெர்னுட் திலகரத்னுவுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி 'இந்து' தினசரியின் அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி இவ்வாறு குறிப்பிடுகிருர்.

திரு. ஜி. கே. ரெட்டி மேலும் தமது விமர்சனத்தில்:

''இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டுக்கோப்பின் கீழாவது அதிகாரத்தை பரவல் படுத்தவும், மொழிவழிப் பட்டபிராந்தியங்களில் சுயாட்சியை நிறுவுவதற்கும் வகை செய்யும் விதத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி முன்வைத்த பிரேரணைகளை இலங்கை அரசு ஆலோசிக்க முன்வரும் பட்சத்திலேயே, இந்தியா இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபடும். இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி இலங்கைத் தூதுவர் திரு திலகரத்னுவுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போதும் இவ்விடயத்தையே வலியுறுத்தினுர்.

ஒற்றையாட்சிக் கட்டுக்கோப்பின்கீழ்தமிழர்விடுதலைக் கூட்டணியின் கோரிக்கைகளை ஓரளவுக்காவது திருப்தி செய்வது முடியுமென்றும், நெருங்கிய பிராந்திய ஒத்துழைப்புக்கு வகைசெய்யும் விதத்தில் ஏதாவதொரு வடிவில் மாகாணங்களின் இணைப்பினைச் சாத்தியமாகல மென்றும் இந்திய அரசியல நிபுணர்கள் கருதுகின்றனர்'' எனவும் குறிப்பிட்டுள்ளார்,

# துப்பாக்கிச்சூட்டு மரணங்கள்: கொலை என்று தீர்ப்பு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி புகையிரதநிலையத்தில் சடந்தமாதம் இடம் பெற்ற இராணுவத் துப்பாக்கிச்சூட்டு மரணங்களும், பொதுச்சந்தையில் இடம் பெற்ற கோழி வியாபாரியின் மரணமும் கொலையென்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

புகையிரத நிலயத்தில் மரணமாகிய திருமலைவாசிகள் திருமதி சின்னமணிதங்கராசா (40 வயது), தங்கராசா சுகந்தினி (11வயது), உதயநகரைச் சேர்ந்த நீர்ப்பாசன ஊழியர் துரைச்சாமி கதிர்காமு (18 வயது), பாரதிபுரத்தைச் சேர்ந்த பாண்டி சிவகுரு (21வயது) ஆகியோரினதும், பொதுச்சந்தையில் மரணமாகிய இராமலிங்கம் அழகையா (48வயது) (கோழிவியாபாரி) ஆகியோரின் மரணங்களும் கொலை என்று கிளிநொச்சி நீதவான் கே. பாலச்சந்திரன் தீர்ப்பு வழங்கினுர்.

இதேவேளை பரந்தனில் இராணுவத் துப்பாக்கிச்சூட்டிற்கு பலியாகிய கந்தசாமி ஆசைமுத்து, இராமநாதன், மகேந்திரன் முதலானேரின் மரணங்களும் கொலை என்று பதில நீதவான் டபிள் யூ. கார்த்திகேசு தீர்ப்பு வழங்கினுர்.

இம்மரணங்கள் அனைத்துக்குமான பிரேதபரிசோதனைகள் கிளிநொச்சி ஆஸ்பத்திரிவைத்திய அதிகாரி டாக்டர் வேல் முருகையாவால் மேற்கொள்ளப்பட்டது. சாட்சிகளை கிளிநொச்சி கிராமசேவையாளர் எஸ். தனபாலசிங்கம் ஆஜர் செய்தார்.

# இலங்கைப் படகிலிருந்து ரூ. 3 லட்சம் பொருள் கைப்பற்றப்பட்டன

[புதுடில்லி]

தூத்துக்குடிக்கருகேயுள்ள கடற் குதியில் இலங்கையைச் சேர்ந்த மோட்டர் படகொன்றிலிருந்து மூன்று லட்சம் ரூபா பெறுமதியுள்ள வீடியோ கசட் மற்றும் சாதனங்களையும் வெளிநாட்டுத் துணி வகைகளையும் இந்திய சுங்கத்துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் படகில் வந்தவர்கள் சுங்க அதிகாரிகளைக் கண்டதும் படகினை கைவிட்டு தப்பியோடியதாகத் தெரிவிக்கப்பட்டது. [து]

## 21 ஆண்டுகளின் பின்னர் நடந்த

# மாநகராட்சித் தேர்தல்

[ஹைதராபாத்]

ஆந்திரப் பிரதேசத்தில் ஹைதராபாத் மாநகராட்சி தோதலில் வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடைபெற்றது இருபத்தொரு ஆண்டுகளுக்குப்பின்னர் இந்தத் தேர்தல் நடக்கிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்குப் பதிவின் போது சில வன்முறைச் சம்பவங்களும், வாக்குப் பெட்டிகள் கைப்பற்றப்பட்ட சம்பவங்களும் நடந்ததாக தெரியவருகிறது.

மீண்டும் வாக்குப்பதிவு நடத்த வேண்டும் என்று பிரதேச காங்கிரஸ் ஐ கட்சிகேட்டுள்ளது.

அதிகளவு மோசடி நடந்துள்ளதால் இத்தேர்தலை திரும்பவும் நடத்த வேண்டும் என்று தெலுங்கு தேசம் கட்சியும் கேட்டுள்ளது. [து]

## மதுரைக்கிளை அங்குரார்ப்பணம்

(சாவகச்சேரி)

அறவழிப்போராட்டக்குழுவின் மதுரைக்கிளை ஒன்று அண்மையில் மதுரையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டுள்ளது

தமிழகத்தில் இருக்கக்கூடிய காந்தீய அமைப்புகளுடனும், சர்வோதய நிறுவனங்களுடனும் நெருங்கியதொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதும். இலங்கையில் இருந்து அகதிகளாக அங்குசென்று தங்கியிருக்கும் மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டும் இக்கிளை நிறுவப்பட்டுள்ளது. மதுரைக்கிளையின் சார்பில் ஒரு முழுநேர ஊழியர் அங்கு பணிபுரிகின்ருர்.

## மிருதங்க வித்துவான் காலமானுர்

(சென்னை)

பிரபல மிருதங்க வித்துவான் திரு. டி. பி. நாகராஜன் (56 வயது) தஞ்சாவூரில் நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானுர். [து]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு. —குறள்

[உலகத்தில் சான்றோர் எவ்வாறு தம் வாழ்க்கையில் பயன்பட்டனரோ, அவ்வாறே பொதுமக்களுக்குத் தம் வாழ்க்கை பயன்படும்படி அமைப்பது அறிவின் செயலாகும் ]

# நமது நோக்கு

## ராணுவத்தீர்வு என்பது நிரந்தர ஓய்வே!

'பென்ஷன்' என்ற பதத்துக்கு ஆங்கில அகராதிக்குப் பேர்போன டாக்டர் ஜோன்சன் அவ்வகராதியில் கொடுத்த விமர்சனம் இன்று எம் இதயத்தைத் தொடுகிறது.

நாட்டின் ஆட்சிக்கு பக்கபலமாக அதன் அநீதிகள் அத்தனைக்கும் ஆதரவளித்த ஊழியர்களுக்கு சேவைமுடிவில் கொடுக்கும் உபகாரமே பென்ஷன் என்று டாக்டர் வரைவிலக்கணம் வழங்கியிருக்கிறார்

எந்த ஆட்சியும் மக்களைப் பிழிந்துவிடுவதில் தவறுவதில்லை என்ற நம்பிக்கை கொண்ட அறிஞர் இவ்வாறு விமர்சிப்பதில் வியப்பில்லை. மக்களைப் பிழியும் ஆட்சி தமக்கொருகாலம் உதவிய ஊழியர்களை ஒதுக்கவேண்டுமானால் அதற்கும் தயாரென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

அது ஒரு பக்கத்தின் ஆராய்ச்சி. மற்றைய பக்கத்தில் காணட்படுவதே ஓய்வூதியம் என்ற 'பிச்சை' யெடுக்கும் இன்றைய முயற்சி.

நாடெங்கிலும் இந்தக் கூட்டத்தினர் சொல்லொணாத துன்பங்களுக்கு இலக்காகின்றனர். கொடுக்கும் பணத்தில் பாகுபாடு; அதனை வழங்கும் முறைகளில் சிக்சல்கள்; அதுவும் வடக்கிலும், கிழக்கிலும் பாதுகாப்புக் காரணமாக, கச்சேரிகள், தபாற்கந்தோர்கள் கைவிடப்பட்டு, ராணுவபாதுகாப்புக்காக கோட்டையும் ஏனைய கொத்தளங்களும் தெரிந்தெடுக்கப்படுகின்றன.

அரசாங்கம் எடுக்கும் பிரயத்தனங்கள், மக்கள் தம் மாதஊதியத்தை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டன.

கொள்ளைகள்தொடர்ந்து நடைபெற்ற பின்னரே இவ்வித பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன

கடந்த சனிக்கிழமை யாழ். கோட்டைக்கருகில் நடைபெற்ற பயங்கர சம்பவம் உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன் என்ற வாசகத்துக் கொப்பானது.

பாதுகாப்பு வலயம் என்பது மக்களைப் பலியெடுக்கும் தூக்குமரம் என்றுநாம் அடிக்கடி குறிப்பிட்டு வந்தோம்

இதனை உடனடியாக நீக்கவேண்டுமென்றுகேட்டதோடு, மக்கள் கிளர்ந்தெழாவிட்டால் அரசாங்கம் அசையாதென்றும் குறிப்பிட்டோம்.

தினசரி தமிழ் மக்கள் மிகச்சாதாரணமாக தெருவிலும், திண்ணையிலும், பஸ் நிலையங்களிலும், புகையிரதநிலையங்களில் கொல்லப்படுவதை அறிகிறோம்.

வவனியாவில், பூவரசங்குளத்திலும் இன்னும் பல இடங்களிலும் மக்கள் அநியாயமாக கொல்லப்பட்டதால், அதெல்லாம் தமிழ்ப் பயங்கரவாதிகளின் செயல்என்று பறைசாற்றுவதும் ராணுவ தீர்வு எத்தகையது என்பது விளக்கும் செயல்களே.

இந்த அடிப்படையிலே யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டை ஏற்கனவே சிறந்த 'சாதனைகள்' புரிந்திருக்கிறது. இதனை அறிந்தும் மக்களின் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்ட வலயம் ஒருபோதும் அவர்களின் அழிவுக்கு இடமளிக்காதென்ற வாக்குறுதியை, ஆற்றுக்கொடுமையில் நம்புவது இயல்பு,

அரசாங்க பென்ஷன் இன்ன திகதியில் இன்ன இடத்தில் என்று அடிக்கடி உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டால், அது யாழ் கோட்டை அணித்தாலும், ராணுவ பாதுகாப்புக்கொண்ட இடம் என்ற அளவில் அரசாங்க கோரிக்கை என்ற காரணத்தாலும் பென்ஷன் நாள் எப்போது விடியுமென்று காத்திருக்கும் மக்கள் அங்கு செல்வது இயற்கை.

அதுமட்டுமல்ல, நூற்றுக் கணக்கில் அள்ளுப்படும் சனக்கூட்டத்தைத் தவிர்ப்பதற்காகவும் விடியுமுன்னரேபோகின்றனர். பட்டும் பட்டும் இலங்கை இராணுவத்தின் மேன்மைபுரியாத நிலை இது

இன்னும் சிலகாலம் பிறந்த பொன்னுட்டில் பெறக்கூடிய ஊதியத்தில் வாழ்க்கையை நிறைவேற்றக் காத்திருக்கும் கூட்டத்தினருக்கு அன்று கிடைத்த ஓய்வு நிரந்தர ஓய்வு என்று எமது பத்திரிகை சரியாகக் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த அழகான டச்சுக் கோட்டை இன்று மக்களுக்கு யமனுக இருப்பதால் இதனைக்கட்டிய டச்சுக்கார ஆட்சி அவ்வளவு 'தேவலை' என்று சொல்லவருகிறது.

இன்றைய ஆத்திரத்தில், போத்துக்கேயர், டச், பிரிட்டிஷ் கூட்டத்தினரை மீள அழைப்பது மடமை.

எங்கள் ஆட்சியில் மாற்றங் காணவேண்டுமென்பதற்காகவே மக்கள் தினந்தோறும் மிகப்பயங்கரமான வகையில் மடிகின்றனர். இதனை நிறுத்த எவ்வகையில் அரசாங்கத்துக்கு நாம் உதவலாம்.

ராணுவத்தீர்வு நிரந்தர ஓய்வு என்பது தெளிவாகிறது. இதற்கு நாம் ஆயத்தமில்லையென்பதை மிகத்திடமாக ஒன்றுபட்ட குரலில் எடுத்துரைப்போம்.

இந்த ஆட்சிமுறையை அகற்றராணுவத்தை முதல் அகற்றவேண்டியது மிகமிக அவசரமானது.

★ உலக மேடை — உலகம் சுற்றி

# மார்க்கோஸின் வெற்றி யானை உண்ட விளாங்கனி

### பிலிப்பைன்ஸ்

தேர்தலும் மோதலும் ஜனாதிபதி மார்க்கோஸுக்கு ஒருவார முடிவில் அளித்த பரிசு யானை உண்ட விளாங்கனியே, Dead Sea fruit என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் பண்டம் இது. நாட்டுக்கோ அவருக்கோ இந்த மோசடித் தேர்தல் எவ்வித விடிவையும் உதவப்போவதில்லையென்பதே தேர்தலைப் பார்வையிட்ட வெளிநாட்டுப் பிரமுகர்களின் கருத்து. திட்டமிட்டபடி-தாம் முன்னரே சொன்ன சாத்திரப்படி 15 லட்சம் பெரும்பான்மை வாக்கால் வெற்றியீட்டியதாக மலைகளைக் குடைந்த பிலிப்பைன்ஸ் தேசிய சபை இந்த எலியை இன்று பிரகடனப்படுத்தியிருக்கிறது.

### அமெரிக்காவின் இரட்டை வேடம்

தேர்தல் மோசடி தெரிந்த விடயம். ஆனால் ஜனாதிபதிக்கும் மக்கள் ஆதரவு உண்டு. எதிர்க்கட்சி வேட்பாளர் அக்கினோவும் கணிசமான வாக்குகளைப் பெற்றிருக்கிறார். ஜனநாயக முறையில் நாட்டைப் பாதுகாத்துப் பரிபாலிக்க இவ்விருவரும் ஒற்றுமைப்பட்டு ஆட்சியில் தொடர்வது எப்படி? இந்தக் கேள்வியை எழுப்பும் ஜனாதிபதி றீகன் நிலைமையைச்சமாளிக்க தம்முடைய விசேட தூதுவரை பிலிப்பைன்சுக்கு அனுப்பியிருக்கிறார்.

பிலிப்பைன்ஸ் இன்றும் அமெரிக்காவின் குடியேற்ற நாடா?மக்கள் இதற்கு விடையளிக்க அங்குள்ள கத்தோலிக்க ஆயர் மாநாடு ஆவன செய்கிறது.

### தென் ஆபிரிக்கா

ஜெனரல் போத்தாவின் சீர்திருத்த நடவடிக்கைகளும், கறுப்பர்களுக்கு உரிமைகள் அளிக்கும்திட்டமும், தேசியத் தலைவர் மன்டெலாவின் சிறைமீட்பும் - இவையாவும் தென் ஆபிரிக்கா என்ற 'மந்திரவாதிகளின் அண்டா'விற்கு எவ்வித அமைதி உண்டாக்கவும் உதவவில்லை. கறுப்பர் கொல்லப்படுவதும் ஜெனரல் போத்தாவின்ஒடுக்குமுறை ராணுவம் தன்தொழிலில் தொடர்வதும் இன்றைய நிகழ்ச்சிகள்-கறுப்பினத்தவர் தமது போரை தீவிரப்படுத்துவதில் தயக்கம் காட்டவில்லை.

### உகண்டா

எதிர்த்துப் போராடும் கெரில்லாக்கள், கொடிய ஆட்சிக்கு முற்றுக்கட்டுவதானால் அவர்கள் பயங்கரவாதிகளா? இக்கேள்விக்கு உகண்டா நல்லதோர் உதாரணம், இடிஅமின் ஆட்சிகவிழ்ந்தது ஒருவியப்பா. அவரை வீழ்த்தி அதே பாணியில் ராணுவ ஆட்சி நடத்திய ஜெனரல் ஒக்கலா இன்று தேசிய எதிர்ப்பு இராணுவத்தால் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்.

இந்தப் போரிலும் பொது மக்கள் கொல்லப்படுவதையே கெரில்லா எதிர்ப்பு இயக்கம் கண்டித்து வந்தது. ஒக்லோவின் ஆட்சி கடும்போரில் கவிழ்ந்தது. இடி அமினின் ஆதரவாளர்களே இன்றும் இந்த நாட்டின் வன்செயல்களில் முன்னிற்கின்றனர்.

சீரழிந்து கிடக்கும் இந்த நாட்டின் மீட்சி இன்று கெரில்லாக்கள் ஆதரவளிக்கும் தலைவர் மியூஸ் வேனியின் ஆளுந்திறமையில் தங்கியிருக்கிறது இவர் இடதுசாரியாகவிருந்தாலும் இவருக்கு அமெரிக்காவின் ஆசி கிடைத்திருக்கிறது

### ஹெயிட்டி

பசுபிக் பிராந்தியத்துக்கு பலமளிக்கும் அமெரிக்க தளங்கள் கொண்ட பிலிப்பைன்ஸ் தேர்தல் ஏமாற்றம் ஜனாதிபதி மார்க்கொஸ் ஆட்சியை இன்றும் கவிழ்க்கவில்லை. இதே சமயம் கரீபியன் பிராந்தியத்தில் ஹெயிட்டி என்னும் சிறுநாட்டில் என்றும் ஜனாதிபதியென்றிருந்த ஜனாதிபதி ஜீன் குளோடி டுவாலியர் பதவி கவிழ்க்கப்பட்டு அரசியல் தஞ்சம் புகநாடில்லாது ஈரான் மன்னர் ஷாபோன்று அவஸ்தைப்படுகிறார்.

தெற்கு ஆசியாவில் பாகிஸ்தானை (இலங்கை அல்ல) நம்பியும், தென்கிழக்காசியாவில் வியட்நாம் தோல்வியின் பின் பிலிப்பைன்சை நம்பியும் நிற்கும் அமெரிக்கா தன்னுடைய அபரிமிதமான உதவியெல்லாம் காற்றில் பறப்பதைக்காண்கின்றது. பசுபிக் பிராந்தியத்திலும் அவுஸ்திரேலியா, நியுஸிலந் நாடுகள் மாறிநிற்கின்றன.

மத்தியஅமெரிக்க நாடுகளில் ஜனாதிபதிறீகனின் ஆதரவு ஒரு தலைப்பட்டதாககுற்றஞ்சாட்டிவரும் நாடுகளில், அவ்வித ஆட்சிகளில் சர்வாதிகாரம் தலையெடுத்தபோதும், சிலரை ஆதரித்தும், வேறுசிலரை எதிர்த்தும் வருதலாலும் அமெரிக்காவின் 'ஜனநாயகப் போக்கும், கம்யூனிச எதிர்ப்பும் ஒரு திடமான கோட்பாட்டுக்கு அமையவில்லை. எனவே இந்தநாடுகளில் மக்கள் எதிர்ப்பு பெரும்பாலும் அமெரிக்க ஆதரவு அனுவசிய தலையீடு என்ற கருத்துக்கு இடமளிக்கின்றது,

### ஹெயிட்டியின் சர்வாதிகாரி

தகப்பன் மகன் என்றபரம்பரை ஆட்சியை சர்வாதிகார ஆட்சியாகமாற்றி பொதுமக்களை வறுமை வாழ்வுக்கு அடிமைப்படுத்திய டுவாலியர் 14 வருடத்துக்குப்பின் ராணுவ சதியால் துரத்தப்பட்டார். அவருடைய தகப்பன் பெரிய [பப்பா] டுவாலியரின் கொடுங்கோலைத் தொடர்ந்து நடத்திய [பேபிடொக்] அவருடைய மகன் நாட்டைவிட்டு வெளியேறியபோது தலைநகராகிய போர்ட்-ஒ- பிறின்ஸ் நகரத்தில் மக்கள் கூட்டம் 'டவுன் வித்-டுவாலியர்' என்று கோஷமிட்டு, கார் ரயர்களை சுவாலிக்க எரித்தார்கள். இப்படிக் குதூகலித்துக் கொண்டாடிய காட்சிகள் இன்றும் அடிமைத்தனத்தில் அவஸ்தைப்படும் மக்களுக்கு நிவாரணம் உண்டு என்ற நம்பிக்கை அளிக்கின்றன.

### ஆனையும் அறுகம் புல்லில் அடிசறுக்கும்

மத்திய கிழக்கு விவகாரங்களுக்கு பெரிய முதலாளி என்ற பொறுப்பை எடுத்திருக்கும் அமெரிக்கா,- ஒரு சிறு நாடாகிய லிபியாவுடன் போர் தொடுத்திருக்கிறது. போர்? என்று ஜனாதிபதி றீகன் கொல்லென சிரித்தார். ஆனைக்கும் பூனைக்கும் ஏதுபோர்? என்ற கருத்தே அந்தச் சிரிப்பில் பட்டது

அமெரிக்காவின் 'சிண்' என்று சொல்லப்படும் இஸ்ரேல் அண்மையில் நடத்திய விமானக் கடத்தல் நாடகம், பிரதமர் பேரஸ் கட்டளைப்படியென்றும், அக்கட்டளை பிழையானதென்றும் அதனைத் தூண்டிவிட்ட பொறுப்பு அமெரிக்காவிடம் இருப்பதாகவும் கருதப்படுகிறது.

'பயங்கரவாதத்தின்' பிறப்பிடம் லிபியா என்று நம்பியதால் அந்தச் சந்தேகத்தின் விளைவே லிபியன் ஜெட் விமானக் கடத்தல் இது அப்பட்டமான ஆகாயக்கொள்ளை -பயங்கரக் கொள்ளைஎன்பதை விடவேறென்ன? என்பது ஒரு பொது அபிப்பிராயம்.

ஐ நா பாதுகாப்பு சபை இதனை கண்டித்து நடவடிக்கையில் இறங்க அமெரிக்கா தன்னுடைய வீட்டோவால் நிராகரித்துவிட்டது. நண்பனை நட்டாற்றில் ஒருபோதும் விடாது.

# மத்திய கிழக்கில் சமாதானம் மத்திம நிலையில் தொடர்கிறது

### பி எல் ஓ

உலகில் பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறதென்று புலம்பிவரும் மேற்கத்திய நாடுகள் இப்பகுதியில் இன்று நடைபெறும் கொடிய சம்பவங்களை பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருப்பது வேடிக்கையாகவிருக்கிறது. சர்வதேச சட்ட ஒழுங்கின்படி இஸ்ரேலின் செய்கை பாரதூரமான குற்றச்செயல்.

மேற்காசியாவில் நிலவும் பதற்றநிலையை இஸ்ரேலின் தாக்குதல் அதிகரிக்கிறது.

### அமெரிக்காவின் லிபிய பகிஷ்காரம்

லிபிய ஆட்சி திடமான வெளிநாட்டுக் கொள்கை இல்லாத ஆட்சி என்பதில் உண்மை உண்டு. ஜனாதிபதி கடாபி நிதானமற்ற முறையில் குறுக்கேயும், கோணல் வழிகளிலும் இறங்கும் இறுமாப்புடையவர்; ஆனால் சரி இதுவென்று கொண்டாரானால் எந்த ஏகாதிபத்திய திமிரையும் எதிர்க்கும், வீரப் போராளி என்பதில் ஐயமில்லை. அரபு நாடுகளின் நியாமான கோரிக்கைகளுக்கும் பாலஸ்தீனியரின் நீண்டகால நாடற்ற பிரச்னைக்கும் லிபியா ஆதரவளிக்கிறது. இஸ்ரேலிய தாக்குதல்களை எதிர்த்துப் போராடும் நாடுகளுடன் லிபியா நிற்கிறது. இதனை அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்காது. லிபியாவின் கொட்டத்தை அடக்குவது கடினமல்ல என்ற கொள்கை வாஷிங்டனில் நிலவுகிறது. ஒரு பெரிய தேருக்கு ஒரு சில்லின் சாவி காணமல் போனால் தேரின் அவலம் எத்தகையதோ, அந்த நிலை இன்று பல சிறிய நாடுகளின் எதிர்ப்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெலிகொப்டர் . . .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யுதம் (40 வயது) ஆகியோர் பலியானவர்களாவர்.

## பதற்றம் ஏற்பட்டது

நேற்று அதிகாலை குறிஞ்சாத்தீவில் ஏற்பட்டசம்பவத்தைத் தொடர்ந்து கொடிகாமம் முதல் பளை வரை பதற்றம் நிலவியது.

கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. மக்கள்நடமாட்டம் காணப்படவில்லை. இ. போ. ச. பஸ் மற்றும் மினி பஸ் சேவைகள் நடைபெறவில்லை.

நேற்றுக் காலை 6 மணி முதல் ஹெலிகொப்டர்கள் கொடிகாமம், மிருசுவில் ஊடாக ஆனையிறவுக்குச் சென்று பின் திரும்பிக்கொண்டிருந்தன இதனால் பீதியடைந்த அப்பகுதி மக்கள் வீதியில் நடமாடுவதைத் தவிர்த்துக்கொண்டனர். ஒரு சில வாகனங்களே வீதிகளில் காணப்பட்டன.

## ஓட்டுவெளித் தாக்குதல்

நேற்றுக்காலை 9 மணியளவில் ஓட்டுவெளிப் பகுதியில் சுமார் அரை மணி நேரமாக ஹெலிகொப்டர் தாக்குதல் இடம்பெற்றது.

குறிஞ்சாத் தீவுச் சம்பவத்தைத் தொடர்ந்து, பளைமுதல் கொடிகாமம் வரை வீதியோரங்களில் வாழ்ந்து வந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்கள்.

9 மணியளவில் கொடிகாமத்திலிருந்து பளைநோக்கிச்சென்ற கார் மீது ஹெலிகொப்டர் தாக்குதல் நடைபெற்றதால் கார்ச் சாரதி வேலாயுதம் பலியானார். காரில்சென்ற பளை (சேகரம்) பெற்றோல் நிலைய உரிமையாளர் வி. இராசசேகரம் காயமடைந்தார்.

ஆனையிறவிற்கும் பக்கச்சிக்கும் இடையில் அம்பிகை நாகன் சமத்திற்கு சமீபமாக இராணுவத்தின் மீது மேற்கொண்ட பலத்த தாக்குதல் சம்பவத்திற்குப் பின்னர் இந்த ஆகாயத் தாக்குதல் இடம் பெற்றது.

## மினிபஸ்மீது தாக்குதல்

சாவகச்சேரியில் இருந்து பளை நோக்கி சுமார் 30 பிரயாணிகளுடன் சென்ற மினிபஸ், முகமாலை கொற்பிட்டி ஏற்றத்தில் செல்லும் போது அதன்மீது மிகத்தாழ்வாகப் வந்த ஹெலிகொப்டரில் இருந்து சரமாரியாகத் தாக்குதல்நடத்தப்பட்டது சில பிரயாணிகள் பஸ்ஸிலிருந்து பாய்ந்து ஓடித்தப்பின; ஒரே.அவலக்குரலாக இருந்தது.

மினிபஸ் சாரதியான மீசாலையைச் சேர்ந்த சிவானந்தன் பலியானார்.

மினிவானில் கொடிகாமத்தில் இருந்து தயாருடன் பளைக்கு சென்றுகொண்டிருந்த 7 வயது சிறுவன் பொன்னன் குணராசாவும் பலியாகியுள்ளார். இவரது சடலமும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டது. மினிபஸ் கண்டக்டர் உட்பட சுமார் 5 பேருக்குக் காயமேற்பட்டது. இந்தபஸ் நேற்றுத்தான் முதன் முதலாகச் சேவையில் ஈடுபட்டது.

காயமடைந்தவர்கள் வேறொரு வாகனத்தில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மூவர் அம்புலன்ஸ் மூலம் யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் உடன் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சுமார் 60 வயது வயோதிடமாதின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் உள்ளது. இச் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

வடமராட்சியைச் சேர்ந்த கார்ச்சாரதி வேலாயுதம் என்பவரின் சடலமும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் உள்ளது.

பளை வண்ணாம்கேணியைச் சேர்ந்த கமலா வயிற்றில் சூட்டுக்காயத்துடன் பளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

மினிவான் கிளினர் தர்மலிங்கம், மற்றுமோர் பிரயாணி எஸ். நற்குணமும் [20 வயது] படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி பதில் நீதவான்கள் திருவாளர்கள் சந்கசாமி. பாலகிருஷ்ணன் ஆகியோர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரணவிசாரணைகளை நடத்தினர்கள்.

# யாழ். ஆஸ்பத்திரி--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திக்கப்பட்டனர்.

ரூபன் [20 வயது] கொக்குவில், வி. இராசதுரை [26 வயது] எஸ் முருகேசு [63 வயது] தாளையடி, கே. விமலரஞ்சன் [19 வயது] காளையடி, ஆகியோரே அனுமதிக்கப்பட்டவர்களாவர். [ஐ-க]

# மினிபஸ்மீது...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ந்த பஸ்மீது சாரமாரியாகச் சுட்டது'' என்று மினிபஸ்ஸில் பிரயாணம் செய்து துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள திருவானந்தமூர்த்தி கூறினர்.

இவர் எழுதுமட்டுவாளில் இருந்து பளைக்குச் செல்வதற்காக மினிபஸ்ஸில் பிரயாணம் செய்தவர். அவர் மேலும் கூறியதாவது,

''பஸ்ஸினுள் முப்பது பேர் வரையில் இருந்தோம் ஹெலிகொப்டர் சுடத்தொடங்கியதும் எல்லோரும் பலமாக ஓலமிட்டுக் கத்தினர்கள். ஆயினும் துப்பாக்கி வேட்டுக்கள் நிற்கவில்லை சிலர் பாய்ந்து ஓடினர்கள் சாரதிக்குச் சூடுபட்டது. எனினும் சாதுரியமாகச் செலுத்தி பஸ்சை நிறுத்தினர்.''

# குறிஞ்சாத்தீவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதுடன், 3 லெப்டினன்ட், 8 கோப்ரல்ஸ், 3 சார்ஜன்ட், 38 சிப்பாய்கள் அழிக்கப்பட்டனர். நவீனரக துப்பாக்கிகள், லோஞ்சர்கள் எம்மால் பாவிக்கப்பட்டன. 3 இராணுவத்தினரே தப்பியுள்ளனர். சுமார் 20 நிமிடம் நடைபெற்ற தாக்குதலின் பின்னரே 52 இராணுவத்தினரும் அழிக்கப்பட்டனர். எமது தரப்பில் எவ்வித சேதமுமில்லை.''

# அரசு அறிக்கை

முப்படைகளின் கூட்டுத்தளபதி சிறில் ரணதுங்காநேற்றுத் தெரிவிக்கையில், ''அதிகாலை நடந்த மோதலில் இரு இராணுவத்தினர் இறந்ததாகவும், நான்கு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும், போராளிகள் சிலருக்கு காயம் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்புவதாகவும் கூறினர். [ச]

# விடுதலை!

[யாழ்ப்பாணம்]

இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்ட வர்த்தகரான எஸ். சிவகடாட்சம் (வயது 58) என்பவர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ். 3ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த இவர் கடந்த 7ம் திகதி கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே.

தம்மைக் கடத்தியவர்கள் அன்பாகவும் பண்பாகவும் பராமரித்ததாகவும், நிபந்தனை எதுவுமின்றி மீண்டும் தம்மை வீடுகொண்டுவந்து சேர்த்துவிட்டதாகவும் அவர் பாராட்டுத் தெரிவிக்கிறார். (மா)

# 4 ஆயிரம் ரூபா நிதி சேகரிப்பு

[பண்டத்தரிப்பு]

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 'லியோ' கழகத்தினர் அகதிகளுக்கு வழங்குவதற்காக பொதுமக்களிடையே நிதியும் உடுபிடவைகளும் சேகரித்து வருகின்றனர். இதுவரை சுமார் 4 ஆயிரம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டதாக கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

# வரிவேட்டையில் சிக்கினர்கள்

[புதுடில்லி]

வருமானவரி அதிகாரிகளுக்கு 'டிமிக்கி' விட்ட இந்தியாவின் மிகப் பெரிய பாதணித் தொழில் நிறுவனமான 'பாட்டா இந்தியா' வின் வரியிறுப்பு ஒழுங்கீனங்கள் பற்றி நடத்தப்பட்ட திடீர்வேட்டையில் மூன்று வெளிநாட்டுப் புள்ளிகளும் அகப்பட்டுள்ளனர்.

மேற்படி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரான டச்சுக்காரர் பி. ரி. ஜே நாப்பென், பிறிதொரு பிரிட்டிஷ் இயக்குநர் டக்ளஸ் மக்லியொட மோர்சண்ட், இன்னுமொரு வெளிநாட்டு இயக்குநரும், சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பின்னர் 10,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு இந்திய கம்பனியின் வருமானவரித் தகராற்றில் வெளிநாட்டவர்கள் சம்பந்தப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

# துப்பாக்கிப்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுப்பக்கமாக ஓடிவிழுந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆயுதப் படையினர் மோட்டர் சைக்கிளைக் கைப்பற்றியுள்ளனர். சிலமணிநேரத்தின் பின்னர் அந்த நபர் உறவினர்களால் சடலமாக மீட்கப்பட்டாராம். [மா]

# குண்டுவைத்து---

1-ம் பக்கத் தொடர்ச்சி

ளது

இக் கட்டடம் படுவான்கரையில் உள்ளது. இந்நிலையத்திலிருந்த சகல தளபாடங்களும் கஸ்தாவேஜுக்களும் அகற்றப்பட்ட பின்னரே கட்டடம் குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டதாம்.

முற்றாகச் சேதமடைந்த இந்த நிலையத்தை ஆயுதப் படையினர் நேற்றுப் பார்வையிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது (மா

# பெனிலொப்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கர் நேற்று கொழும்பு வருவாரென்று எதிர்பார்க்கப்பட்டது.

இவரும், பிரிட்டிஷ் தூதாலய உயரதிகாரிகளும், இலங்கை அரசின் உயரதிகாரிகளும் இன்று காலை விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள் என்று அறியப்படுகிறது.

சைக்கிளில் வந்த இருவரில் ஒருவருக்கே இக்கதி நேர்ந்தது.

# மடுவீதிச்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அறிக்கையில் தெரிவிக்கபபட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''நேற்று முன்தினம் காலை [15 ம் திகதி] ஜீப், கவசவாகனங்கள் மினிபஸ் உட்பட 16 வாகனங்களில் 250 இராணுவத்தினர் ரோந்துசுற்றி வந்தனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியபொழுது ஜீப் முற்றாக சேதமடைந்ததுடன் அதிலிருந்த இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற நேரடி மோதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பிவிட்டனர். அதேசமயம் முருங்கன் முகாமிலிருந்து வந்த இராணுவத்தினரை நோக்கியும் போராளிகள் எதிர்த் தாக்குதல் நடத்தியபோது அவர்களும் சென்றுவிட்டனர்.'' என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது [மா]

# அமெரிக்காவே நம்பவில்லை!

(வாஷிங்டன்)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் பேர்டினட் மார்க்கோஸ் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை அமெரிக்க நிராகரித்துள்ளது.

மணிலாவில் நடைபெற்ற மேற்படி தேர்தலில் ஏற்பட்ட குழறுபடிகள் பற்றி ஜனாதிபதி றீகன் ஏற்கனவே கவலை தெரிவித்தமையும், தமது விசேஷ தூதுவரை மணிலாவுக்கு அனுப்பிவைத்தமையும் தெரிந்ததே!

# மீண்டும் ஹெக்டே தலைவர்

[லக்னோ]

கர்னடக சட்டமன்ற ஜனதா கட்சியின் தலைவராகத் திரு ராமகிருஷ்ண ஹெக்டே மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் ஜனதா கட்சி தீர்மானித்த இந்தமுடிவு மாநில கவர்னருக்கு அறிவிக்கப்பட்டது.

# மயானத்தில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அவரின் உடல் அரைகுறையாகவே மயானம் ஒன்றில் புதைக்கப்பட்டதாம்.

இப்பரிதாப சம்பவம்நேற்று செங்கலடி-பதுளைச் சந்தியில் இடம்பெற்றது.

புதைக்கப்பட்டவரின் உடலை பின்னர் அவரின் உறவினர்களே சடலமாக மீட்டெடுத்து மரணச்சடங்கை நிறைவேற்றினர்களாம். [ய-மா]

# வீட்டுக்கு தீவைப்பு!

[வவுனியா]

வவுனியாவில் குடியிருப்பு என்னுமிடத்தில் வீடொன்றுக்கு இனந்தெரியாத நபர்கள் நேற்று தீவைத்து எரித்துள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இவ்வீடெரிப்பு சம்பந்தமாக அப்பகுதியில் தேடுதல் நடத்திய ஆயுதப்படையினர் மூவரைக் கைது செய்துள்ளனர், இவர்களில் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் பின்னர் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டு பின்னர் மீண்டும் அவரை ஆயுதப்படையினர் முகாமுக்கு கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ய-மா]

# ஊழலை அகற்ற ஒரு கமிஷன்

[கொழும்பு]

அரசதுறையில் நடைபெறும் ஊழல்கள்பற்றி ஆராய மூன்றுபேர் கொண்ட ஒரு கமிஷனை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் இடம்பெறவுள்ள மேற்படி கமிஷனுக்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டுத்தாபன தலைவர்கள், தனியார் நிறுவன அதிபர்கள் முதலானோரை விசாரணை செய்யும் அதிகாரம் வழங்கப்படுமெனத் தெரிய வருகிறது.

மேற்படி கமிஷனின் பணிக்கென ஒரு விசேட அலுவலகம் இவ்வாரம் திறக்கப்படவுள்ளது எனவும் அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.


## உருக்கமான வேண்டுகோள்

கந்தர்மடம் உடையார் ஒழுங்கையில் இருக்கும் 30/1 இலக்கமுடைய இல்லத்திலிருந்து 15-2-86-ல் 11 சிறி 6999 சாம்பல் நிறமுறைய Datsun கார் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டது. இதில் புனித இயக்கங்கள் தலையிட்டு மீட்டுத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,
க. வேலுப்பிள்ளை
இல. 20, ஸ்ரீவேங்கடேசர் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம். [C 822]

## உருக்கமான வேண்டுகோள்

எனது கணவராகிய கந்தையா மகாலிங்கம் 27-1-86 மன்னருக்கு வேலைக்குச்செல்லும்பொழுது இனந்தெரியாத நபரினல் கடத்தப்பட்டுள்ளார். அவரைப்பற்றி எந்தவித தகவலும் இல்லை, அப்பாவி மனிதரான எனது கணவனை உடனடியாக விடுதலை செய்யுமாறு மிகவேதனையுடன் கேட்டுக்கொள்கிறேன். அவர் கடத்தப்பட்டதாக அறிந்த நாள் தொடக்கம் நானும் எனது மூன்று குழந்தைகளும் ஊண் உறக்கமின்றி வாடுகின்றோம். எனது கணவரை மனிதாபிமான அடிப்படையில் மீட்டுத்தருமாறு புனித இயக்கங்களை வேண்டுகின்றேன்.

இப்படிக்கு
மனைவி சந்திராதேவி.
(A 257) வறுத்தலைவிளான், தெல்லிப்பழை.

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
T. ராஜேந்தர்— ஸ்ரீவித்யா
மைதிலி
என்னை காதலி

லிடோ சினிமா
10-30, 2-30, 4-45 6-30
James Bond 007
in
Octo Pussy
(Cinemascope Colour)
[Sexy Action and Thrills]

வெலிங்டன்
10-30, 2-30 4-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ்
நடித்த
ஆனந்த ராகம்
(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன்றைய சூழ்நிலையில் அனாதை இல்லங்கள் சேவை மிக அவசியம்"

## அடிக்கல் நாட்டு வைபவத்தில் உதவி அரச அதிபர்

[என்.எம்.கந்தசாமி]

''தற்போதைய சூழ்நிலையில் அனாதை இல்லங்களின் சேவை மிகவும் முக்கியமான தொன்றாக விளங்குகின்றது. பொது நல நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் இந்த இல்லங்களின் தேவைகளை நிறைவேற்றத் தம்ம லான உதவிகளை செய்யவேண்டியது அவசியம். திரு.விஜயரத்தினம் அவர்களின் பெருமுயற்சியினால் இந்த இல்லத்திற்கு பல லட்ச ரூபா நிதி உதவி நோர்வே நாட்டிலிருந்துகிடைத்திருப்பது பாராட்டுக்குரிய தொன்றாகும்''

இவ்வாறு திருநெல்வேலி முத்துத்தம்பி அனாதை இல்லத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற நாள்கு லட்ச ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக சர்வதேச தொடர்பு பிரிவுத் தலைவர் லயன் இ. விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் புதிதாக அமைக்கப் படவுள்ள நூல் நிலையம், நிர்வாக அலுவலகம் ஆகியவற்றுக்கான அடிக்கல்லை திரு. கோபாலரத்தினம் சம்பிரதாய முறைப்படி நாட்டினார்.

திரு. கோபாலரத்தினம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ''இந்த இல்லத்தின் வளர்ச்சிக்காக 'இந்து போட்' அதிபர் அமரர் இராசரத்தினம், முதலியார் முத்துத்தம்பி போன்ற பெரியார்கள் சிறந்த சேவைகளை ஆற்றியுள்ளார்கள் இவர்கள் ஆற்றிய சேவைகள் காலத்தினால் அழியாதவையாகும். இறைவனுக்கு ஆற்றும் தொண்டைப் போலக் கருதி இந்த அனாதை இல்லத்திற்கு தேவையானவசதிகளைச்செய்து கொடுத்தார்கள். நான் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக பதவி வகித்த காலப்பகுதியில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினதும் லயன் விஜயரத்தினம் அவர்களினதும் பொது நல சேவைகளையும் மேற் கொண்ட அபிவிருத்தி வேலைகளையும் நன்கு அறியமுடிந்தது. இவரின் பெரு முயற்சியினால் நீண்ட கால தேவையாக இருந்து வந்த அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப் படுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.''

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக சர்வதேச தொடர்பு பிரிவுத் தலைவர் திரு.இ விஜயரத்தினம் உரையாற்றுகையில் கூறியதாவது; ''தமிழ் மக்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வரும் இக் காலகட்டத்தில் பலர் அகதிகளாக அனாதைகளாக வாழ வேண்டிய அவல நிலை உருவாகியுள்ளது. இவர்களின் நல் வாழ்வுக்கு எம்மாலான உதவிகளை செய்து கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

''நோர்வே நாட்டின் முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் தவலோ இங்கு விஜயம் செய்த போது இந்த இல்லத்திற்கும் வருகை தந்து பார்வையிட்டார். இங்கு நிலவும் குறைபாடுகளை நீக்கத் தம்மாலான உதவிகளை செய்வதாக அவர் உறுதியளித்து நோர்வே நாட்டிற்கு திரும்பிச் சென்றதும் தொண்டைம் லயன்ஸ் கழகத்தினதும், நோராட் நிறுவனத்தினதும் உதவியுடன் 10 லட்சம் ரூபாவை இந்த இல்லத்தின் அபிவிருத்துக்கு அன்பளிப்புச் செய்ய முன் வந்தார் அதில் முதல் கட்டமாக 4லட்சம் ரூபா செலவில் இந்தப் புதிய கட்டிடங்கள் நிறுவப் படுகின்றன. இந்த இல்லத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் எம்மாலான உதவிகளை செய்வோம் என்பதையும் இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்'' என்றார்.

சிவதர்ம வள்ளல் க. கனகராசா தமதுவுரையில் கூறியதாவது: ''வெளிநாடுகள் உதவி செய்தால் அவ்வுதவிகளை நல்ல முறையில் நாம் பயன்படுத்த வேண்டும். எமது பணியின் சிறப்பையும் தரத்தையும் பார்த்துத் தான் மேலும் எமக்கு உதவி செய்ய வெளிநாடுகள் முன்வரும்.''

சட்டத்தரணி எஸ்.ஆர் கனகநாயகம், முத்துத்தம்பிவித்தியாலய அதிபர் திரு எஸ் முத்துலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்கள். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தொழிற் பயிற்சி நிலைய இயக்குனரும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபருமான திரு.க அருணசலம் நன்றியுரை நிகழ்த்துகையில் நிதி உதவி வழங்கிய நோர்வே நாட்டு தொண்டைம் லயன்ஸ் கழகத்திற்கும் அதற்குக் காரணமாக இருந்த லயன்.இ.விஜரத்தினத்திற்குப் பாராட்டும், நன்றியும் தெரிவித்தார்.

# இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 5 (17 - 2 - 1986)
கிழமை- திங்கள்
திதி- அட்டமி
பி. ப. வரை
நக்ஷத்திரம்- கார்த்திகை
பி. ப. வரை

மேடம்: சிந்தனைகள் அலைமோதும் செய் கருமங்களில் பதற்றநிலை தென்படும். அவசர முடிவின் மூலம் குறை கேட்க நேரும்.

இடபம்: தானியநஷ்டத்துடன் உடல் நலம் பாதிக்கப்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கும். பிரயாணத்திற்கும் இடமுண்டு.

மிதுனம்: அற்ப விடயத்திற்கு கூட ஆத்திரப்பட நேரும் நெருங்கிய நண்பர் ஒருவரை பகைத்துக் கொள்ள நேரும் நாவடக்கம் நன்று.

கடகம்: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படும், வாழ்க்கையில் கடன் தொல்லை அதிகரிக்கும். சகோதர வழி வரவுமுண்டு.

சிங்கம்: அன்னைவழி ஆதரவு தாராளமாகக்கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளும் பெருகும். பொருள் வரவும் உண்டு.

கன்னி: அறவழியில் மனம் செல்லும். தாராள மனப்பான்மையின் மூலம் பணம் செலவாகும். இளைய பிள்ளையால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

துலாம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிக பேச்சைத தவிர்க்கவும். அரசியல் வாதிகள் மிகவும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும்.

விருச்சிகம்: நலன் தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். குடுமபத்தில் மிகக மகிழ்ச்சியுண்டு. நேர்மை வழியில் நிற்பீர்கள்.

தனுசு: மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பிதாவழிச்சுகமும் உண்டு.

மகரம்: வணிகர்களாயின் வியாபார விருத்திக்கு இடமுண்டு உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். வெளியிடத்து தொடர்புகளும் பெருகும்.

கும்பம்: தொழில் துறையில் நல்ல மாற்றங்கள் ஏற படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும். நண்பராலும் நன்மையுண்டு.

மீனம்: மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

.திருமலை
வே. ரவீந்திரன்

# "சமகாலப் பிரச்னைகளை எழுதும் துணிவு எழுத்தாளருக்கு வேண்டும்!"

## 'மாற்று' விமர்சன அரங்கில் கருத்து

(யாழ்ப்பாணம்)

''இந்திய சினிமாக்களும், சஞ்சிகைகளும் பெரும்பாலானவை ஆபாசம், கவர்ச்சி கொண்டவையாகவே இருக்கின்றன. இவை நமது மக்களை மட்டுமல்ல எழுத்தாளர்களைக் கூட தம்வசப்படுத்தி விடுகின்றன இதனால் நமது நாட்டுப் பத்திரிகைகள் கூட இவற்றிருந்து விலகிச் செல்வற்குப் பெரு முயற்சி எடுக்கவேண்டியுள்ளது.'' இவ்வாறு நாயன்மார்கட்டு பாரதி சனமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற 'மாற்று' காலாண்டு சஞ்சிகையின் விமர்சன அரங்கில் பேசும் போது அதிபர் க. சொக்கலிங்கம் (சொக்கன்) குறிப்பிட்டார்.

திரு. எம். அலோசியஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விமர்சன அரங்கில் கவிஞர் புதுவை இரத்தினதுரை பேசுகையில், ''நாட்டில் நடக்கும் சமகால பிரச்னைகளை அவ்வப் போது எழுதும் துணிவு எழுத்தாளர்களுக்கு வேண்டும். எரியும் பிரசனைகளை எழுதத்தவறினால் அது எழுத்தாளன் என்ற சொல்லுக்கே அவமானமாகும். பிரச்னைகளை விளங்கும் எவரும் எழுதுவதற்குத்தகுதி உடையோரே'' என்றார்.

மற்றும் 'ஈழத்துச் சோமு' ஆசிரியர் வேலாயுதபிள்ளை உட்படப் பலர் பேசினார்கள்

மாற்று சஞ்சிகை ஆசிரிய திரு. யோகேந்திரலிங்கம் பதிலுரை வழங்கினர். (ஐ)

# பாடசாலை கிரிக்கெட் முடிவுகள்:

## பற்றிக்ஸ் - சென்.ஜோன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப்பாடசாலைகளின் மட்டுப்படுத்தப் பட்ட கிரிக்கெட் ஆட்டங்களில் நேற்று சென்பற்றிக்ஸ் கல்லூரியும், சென். ஜோன்ஸ் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் காப்டன் எஸ் ஏ. கிளஸ்ரன் சிறப்பாக விளையாடி ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும், சாதுரியமாக பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட்டுகளையும் வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ கல்லூரி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்களில் 5 விக்கெட் நஷ்டத்துக்கு 166 ஓட்டங்களைப் பெற்றது. மானிப்பாய் இந்துக்கல்லூரி 40 ஓவர்களில் 113 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

### சென். ஜோன்ஸ் வெற்றி

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். ஜோன்ஸ் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் 50 ஓவர்களில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 201 ஓட்டங்களைப்பெற்றது, காப்டன் ஏ. வாகீசன் சிறப்பாக விளையாடி 50 ஓட்டங்களைப் பெற்றார்.

மகாஜனக்கல்லூரி 24 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 51 ஓட்டங்களை மட்டும்மே பெற்றது. கே அகிலன் சிறப்பாகப் பந்து வீசி 10 ஓட்டங்களைக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர். (வி)

# அறவழி சஞ்சிகை

(சாவகச்சேரி)

மகாத்மா காந்தியின் கொள்கைகளை தமிழ் மக்கள் மத்தியில் பரவச்செய்யும் பொருட்டு, அறவழிப்போராட்டக்குழு, சித்திரை மாதம் முதல் ''அறவழி'' எனும் பெயரில் ஒரு மாதாந்த பத்திரிகையை வெளியிட முடிவு செய்துள்ளது. இப்பத்திரிகைக்கென மூவர் கொண்ட ஒரு ஆசிரியர் குழுவும் நியமிக்கப் பட்டுள்ளது.

# கருத்தரங்கு நடைபெற்றது

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கங்களின் மாதாந்த கருத்தரங்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. த. வேலாயுதபிள்ளை தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றபோது தென்னம் கள் போத்தல் ஒன்று நான்கு ரூபாவுக்கு குறையாமலும், பனம் கள் போத்தல் ஒன்று மூன்று ரூபாவுக்கு குறையாமலும் விற்பனை செய்யப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ தலைமை அலுவலகத்தில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

# கண்ணாடி வழங்க நடவடிக்கை

(வண்ணார்பண்ணை)

கண் பார்வைக்கு உதவியாக மூக்குக்கண்ணாடி பெறுவதற்கு வசதியின்றி துயருறும் மக்களுக்த கண்ணாடி வழங்கி உதவும்லயன்ஸ் திட்டத்தின் கீழ், கிராம மட்டத்திலுள்ள வசதியற்ற வர்களுக்கும் மூக்குக்கண்ணாடி வழங்குவதற்கான ஏற்பாடுகளை லயன்ஸ் கழகங்கள் செய்து வருகின்றன.

இத் திட்டத்தின் கீழ் வைத்திய சாலையில் பரிசோதனை செய்து கண்ணாடி பெற முடியாமல் இருக்கும் கண் பார்வை குறைந்தவர்களுக்கு உதவுவதற்கு கோப்பாய் லயன்ஸ் நடவடிக்கை மேற்கொண்டு பரிசோதனைப் பத்திரங்களைச் சேகரித்து வருகிறது.

# பறிமுதல்

(புங்குடுதீவு)

புங்குடுதீவின் பல பகுதிகளில் சட்டவிரோதமான மின் பாவனையை நிறுத்தும்படி இயக்கங்களும் இணக்க சபைகளும்கேட்டுக்கொண்டபோதிலும் அநேகமானோர் அதனை நிறுத்தாது பாவித்துவந்தனர்.

சில நாட்களுக்கு முன்னர் புங்குடுதீவு முழுவதும் இது பற்றிய இறுதி எச்சரிக்கை ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தும், பலர் நிறுத்தாது போகவே சிலஇயக்கத் தோழர்களும் இணக்கசபை அங்கத்தினர்களுமாக 'வயர்' கள் உட்பட அனைத்து உபகரணங்களையும் திடீர் நடவடிக்கை மூலம் பறிமுதல் செய்தனர்.

# சுகாதாரத் தொழிலாளர்கள் முறைப்பாடு

(சுண்டுக்குளி)

தெல்லிப்பளையிலுள்ள மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு இம் மாதத்திலிருந்து 8 மணத்தியால வேலை செய்யுமாறு பணிக்கப்பட்டது தொடர்பாக தொழிலாளர்சள் தமது சுகாதாரத் தொழிலாளர் சங்கத்திற்கு முறையிட்டுள்ளனர்.

கடந்த வருடம் இவர்கள் தமது குறைபாடுகள் பற்றி 20 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மாவட்ட வைத்திய அதிகாரியிடம் சமர்ப்பித்திருந்தனர்.

# முத்திரை தட்டுப்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் இருக்கின்ற தபால் அலுவலகங்களில் முத்திரைகள், வான் கடிதங்கள் போன்றவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் விசேஷமாக வெளிநாடுகளில் இருக்கின்ற உறவினர்கள், நண்பர்களுக்குக் கடிதங்கள் அனுப்புவதற்கு மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

# தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு

[சாவகச்சேரி]

இளைஞர் தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு [illegible] சாவகச்சேரியில் நடாத்துவதற்கு சென்.ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவினரும், அறவழிப் போராட்டக்குழுவும் தீர்மானித்துள்ளது.

இப்பயிற்சி வகுப்பு, கிராமிய மட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஐம்பது இளைஞர் - யுவதிகளுக்கு முதற் கட்டமாக மிகவிரைவில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மினி' இறைச்சிக் கடைகள்: சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள்ளும், அப்பாற் பட்ட ஒரு சில பகுதிகளிலும் திடீர்த் திடீரென தோன்றும் மினி இறைச்சிக்கடை வியாபாரிகளாலும், நடமாடும் சைக்கிள் வியாபாரிகளினாலும் மாட்டிறைச்சி வியாபாரிகளாகிய நாம் பெரிதும் பாதிக்கப்படுகிறோம்.'' என்று யாழ் மாவட்ட மாட்டிறைச்சி வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் திரு. க. சி கிருஷ்ணன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் வேண்டுகோளாகப் பொது ஸ்தாபனங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''சிவில் நிர்வாகம் தளர்ந்துள்ள இவ் வேளையைப் பயன்படுத்தி ஆங்காங்கே தோன்றும் மினி இறைச்சிக்கடைகளை அவ்வப்பகுதி வாழ் மக்கள் எமது சங்கத்தின் வேண்டுதலை ஏற்று அகற்றியிருக்கிறார்கள், அகற்றிக் கொண்டும் வருகிறார்கள். குறிப்பாக, இவ்விடயத்தைப்பற்றி முஸ்லிம் பகுதிகளில் உள்ள முஸ்லிம் சமாதானக் குழுக்கள், இளைஞர் பேரவை, இஸ்லாமிய பாதுகாப்புக்குழு, ஏனைய சன சமூக நிலையங்கள் போன்ற அமைப்புக்கள் இதுவரை இந்த மினி இறைச்சிக் கடைகள் தோன்றுவதை தடை செய்வது சம்பந்தமாக எடுத்து வரும் நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தும்படிவேண்டுகின்றோம் 'மினிஇறைச்சிக்கடைகள்போல எமது வியாபாரிகளின் மாட்டிறைச்சிக்கடைகள் ஐம்பது நூறு கையெழுத்துடன் உண்டாக்கப் படுபவையல்ல. மாநகர சபை, நகர சபை என்பனவற்றுக்கு சந்தைக் குத்தகையாக பல ஆயிரம் ரூபா பணம் கட்டியே கடைகளை நடாத்துகிறோம், இத்துடன் மாதாந்த வாடகை செலுத்துகிறோம். விற்பனவ வரி கட்டுகின்றோம் மாடு, ஆடு அறுப்பு வரி செலுத்துகிறோம். மேலும் எமது கடைகளுக்கு சுகாதாரப் பகுதியினரின் பரிசோதனை உண்டு. விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் கண்காணிப்பு உண்டு. இத்துடன், ஒரு கடைக்கு நாளாந்தம் ஐந்து வேலையாட்களுக்கு மேற்பட்டவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டியும் உள்ளது. இந்தப் பிரச்னைகள் மினி இறைச்சிக் கடைக்காரர்களுக்கு உண்டா என்பதனைப் பொது ஸ்தாபனங்கள் உணரும்படி வேண்டுகிறோம். லைசன்ஸ் அதிகாரம் உள்ள இறைச்சிக்கடை உரிமையாளருக்கு வேண்டியனவற்றைச் செய்யும் படியும் பணிவுடன் வேண்கிறோம். (ஐ)

# "கற்ற கலைகளை பிறருக்குப் புகட்டி சுயதொழிலை ஏற்படுத்த வேண்டும்"

[உடுவில்]

''தமிழ் கலாசாரத்திற்கேற்ப எமது யுவதிகளுக்கு தையல், பன்னவேலை, வலை பின்னுதல், அழகு சாதனப் பொருட்கள், மனையியல் போன்ற கலைகளில் பயிற்சி அளித்து வருகிறது தேசிய இளைஞர் மன்றம் இப் பயிற்சிகளை பூர்த்தி செய்த யுவதிகள் தாம் கற்ற கலைகளை ஏனையவர்களுக்குச் சொல்லிக்கொடுப்தோடு கிராமிய ரீதியில் சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்தக் கூடியதான தொழில் அமைப்புக்களை நிறுவ முன்வர வேண்டும்.''

வடபிராந்திய தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் திரு. எஸ். நாகேந்திரம்காரைநகர்நடமாடும்பெண்கள் பயிற்சி வகுப்பு மாணவிகளினால் நடாத்தப்பட்ட கண்காட்சி, பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு ஆசிரியரும், பத்திரிகையாளருமான திரு. ந. கணேசமூர்த்தி தலைமை வசித்தார்

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கூட்டுறவு முகாமையாளர் செல்வி எம். எஸ். பரமேஸ்வரி மேற்படி மன்ற அலுவலர் திரு .கே. எஸ் கார்த்தி, வாரிவளவு நல்லிபக்க சபைச் செயலாளர் திரு செ பத்மநாதன், விசேட சேவை அலுவலர் திரு.எஸ் கே. சிவலிங்கம், காரைமேற்கு இணக்க சபைத் தலைவர் திரு.தேவராசா, தங்கோடை கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு சோ.விக்கினேஸ்வரன் உட்பட பலர் உரையாற்றினர்கள்.

மேற்படி பயிற்சி வகுப்புக்களை பூர்த்தி செய்த யுவதிகளுக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை அலுவலர் திரு எஸ். பாலசிங்கமும், தேசிய இளைஞர் மன்ற உதவி இயக்குநர் திரு எஸ். நாகேந்திரமும் சான்றிதழ்களை வழங்கினர் பயிற்சி நிலைய ஆசிரியர் திருமதி. ஹேமமாலினி உதயகுமார் நன்றியுரை வழங்கினர்.

# 'கல்வி அபிவிருத்திக்கழகம்' அங்குரார்ப்பணம்

[உடுவில்]

''பாடசாலையின் வேலைத் திட்டங்கள் பாடவிதான அமைப்பு. பாடசாலை அமைந்துள்ள இடம் சூழ்நிலை ஆகியவற்றில் ஏற்படும் பல பிரச்னைகளையும், சிக்கல்களையும் தீர்த்து வைக்கும் நோக்குடன் உடுவில் கல்வி வலயத்தில் யாழ். மாவட்டத்திலேயே முதன் முதலாக இக் கல்வி அபிவிருத்திக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.''

இவ்வாறுயாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு பொ. சி. குமாரசாமி உடுவில் கல்வி வலய கல்வி அபிவிருத்திக் கழகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கூறினர்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டச் செயலாளர் திரு. வே. சி சிவபாலசிங்கம் உரையாற்றுகையில்; இன்று ஆரம்பிக்கப்படும் இக்கழகத்தின் நோக்கம் பாடசாலையினதும் மாணவரினதும் கல்வி சம்பந்தமான வளர்ச்சியையே கொண்டிருக்கும் என்றும் எந்த நிலையிலும் இக்கழகம் பாடசாலையின் உள் நிர்வாக விடயங்களில் தலையிடமாட்டாது என்றும் கூறினர்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து உடுவில் கல்வி வலய கல்வி அபிவிருத்திக் கழகசெயற்குழு உறுப்பினர்களின் தெரிவு இடம்பெற்றது. தலைவராக பி.எஸ் குமாரசாமியும், உப தலைவராக திருமதி பி சச்சிதானந்தமும், செயலாளராக வே. சி. சிவபாலசிங்கமும்,உப செயலாளர் வை யோகீஸ்வரனும், பொருளாளர் த நடராஜாவும், நிர்வாக அங்கத்தர்களாக பண்டிதர் இராசையா, எஸ் சண்முகலிங்கம், எஸ். திபாகரசா, எஸ். எம். மூர்த்தி, வி. மரியதாஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பண்டத்தரிப்பில் கையொப்ப வேட்டை

(பண்டத்தரிப்பு)

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்திட்டத்தை நீக்கக் கோரியும், வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் ஜனாதிபதிக்கு அனுப்பப்படவுள்ள பத்து லட்சம் கையொப்பங்களைக் கொண்ட மகஜருக்கு பண்டத்தரிபபு பகுதியிலுப கையொப்பங்கள் மிகவும் வேகமாக சேகரிக்கப்பட்டு வருகின்றது.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், பண்டத்தரிப்பு பிரஜைகள் குழுத் தலைவருமான திரு அ. வ. துரையப்பா இந்த கையொப்பங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

## மத்திய கிழக்கில்

(4 ம பக்கத் தொடர்ச்சி)

பைத் தேடுகின்ற நீசனின் ஆட்சிக்கு ஏற்படலாம்.

## அமெரிக்காவால் முடியும்

பீ எல் ஓ என்பது ஒரு பாஷாணம் அல்ல, அதற்கு இடம் கொடுத்து தலைவர் அராபாத் ஒரு மனிதன் பயங்கரவாதி அல்ல என்ற கருத்து மாற்றம் அமெரிக்க ஜனாதிபதிக்கு ஏற்படுவதோடு தன்னுடைய சொல்லைக்கேட்கும்படி இஸ்ரேலுக்கு வலியுறுத்தினால் உலகப்படத்தில் ஒரு மாறாத பெரும் புண்ணாக உள்ள மேற்காசியா அமைதி நிலைக்குத்தரும்பவழி உண்டு.

அமெரிக்க - ரஷ்ய உறவு இன்னும் 15 வருடங்களில் அணுஆயுதபோரை உலகிலிருந்து அகற்றிவிட சோவியத் ரஷ்யா ஒரு மூன்று கட்டத்திட்டம் உருவாக்கியுள்ளது இதனை ரஷ்யப் பெருந்தலைவர் கோர்பச்சேவ் கடந்த மாதம் 16ம் தேதி உலகிற்கு பிரகடனப்படுத்திபிருக்கிறார்.

உலகம் அபிவிருத்திக்காண வேண்டுமென்றால் ஆயுதப் போட்டி அறவே ஒழியவேண்டும். உலகின் பெரும்பகுதியைப் பார்த்தாலும், அமெரிக்காவிலிருந்து தூரகிழக்கு யப்பான்வரைக்கும் - இலங்கையின் ஏன் உலகின் மிகச்சிறந்த டச்சுக்கோட்டை உட்பட, போரென்றபெயரால் பொதுமக்கள் அழிக்கப் படுகின்றனர். இவ்வித இருள்கள் அனைத்து உலகையும்சூழ்ந்திருக்கின்றன; இவற்றை நீக்க அகில உலகரீதில் ஏற்படும் சமாதானமே வேண்டப்படுகின்றது என்ற கருத்தைரஷ்யா முன்வைத்துள்ளது.

கடந்த ஜெனிவா உச்சியில் உதயமான அமெரிக்க - ரஷ்ய நட்புஒரு அரும்பாக இருந்தால் அது மொட்டாகுமோ, மலராகுமோ, காயாகுமோ, நமக்குத் தேவையான கனியாகுமோ என்ற சந்தேகம் இன்னும் தீரவில்லை.

அமெரிக்கா தாமெருவேருன்றப்பார்கிறதோ, அங்கெல்லாம் ரஷ்ய அமரிக்க பணியில்ஒற்றர் சேவையல் இடம் பிடிப்பதில் முந்துகிறதென்ற முறைப்பாடு வாஷிங்டனில் இன்னும்பாட்டாகப் படிக்கப் படுகிறது தென்யேமன் புரட்சிக்கும் ரஷ்ய தலையீடு காரணமென்றும் சின்ன விடயங்களை மறக்க முடியாது எங்கும் 'தோல்வி' என்றொரு விரக்தி நீ னுக்குஉண்டு. இருப்பினும் ரஷ்யாவின் நல்லெண்ணத்தை உதறிவிட அமெரிக்கா தயாரில்லை. அதுவே ஒரே ஒரு நம்பிக்கை ஒளி.

# 'போரூட்' நிறுவனத்தின் தாராள உதவி

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை கிழக்கு ஆரம்ப சுகாதார கவனிப்பு குழு ஆரம்பித்துள்ள சுகாதார நிலையத்திற்கு தேவையான மருந்துவகைகளையும், அத்தியாவசிய தளபாடங்களையும் அன்பளிப்பாக வழங்குவதற்கு ''போரூட்'' நிறுவனம் முன் வந்துள்ளது.

குழுத்தலைவரும், லயன்ஸ் கழக வலயத்தலை வருமான டாக்டர் ரி. பகீதரன் போரூட் நிறுவன முகாமையாளர் திரு. சண்முகதாசனுடன் தொடர்பு கொண்டு இது தொடர்பாக விடுத்த கோரிக்கையைஅடுத்து இந்த மருந்துவகைகளும் தளபாடங்களும் கிடைக்கவிருப்பதாக அறியப்படுகின்றது.

இதேவேளை வட்டு. கிழக்கு ஆரம்ப சுகாதார கவனிப்புக் குழு அண்மையில் சங்கரத்தை கிராமத்தில் ஆரம்பித்துள்ள சுகாதார நிலையத்திற்கு தேவையான தளபாடங்களை வட்டுக் கோட்டை லயன்ஸ் கழக செயலாளர் திரு. எஸ். ரி. வைத்திலிங்கம் அன்பளிப்பு செய்துள்ளார்.

# கீரிமலை சிவநெறிக்கழக தெரிவு நிலைப்போட்டி

(பண்டத்தரிப்)

கீரிமலை சிவநெறிக் கழகம் நடாத்தும் நாவன்மை, பண்ணிசைப்போட்டிகளின் தெரிவு நிலைப்போட்டிகள் தூர இடங்களிலுள்ள மாணவர்களின் நலனை முன்னிட்டு இன்று 17ம் திகதி யாழ்ப்பாணத்திலும், 22-ம் திகதி பருத்தித்துறையிலும்,23ம் திகதிதெல்லிப்பழையிலும், 24ம் திகதி சுன்னாகத்திலும், நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தெரிவு நிலைப்போட்டியில் தகுதி பெறுபவர்கள். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய மண்டபத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. இறுதி நிலைப்போட்டிக்கு அழைக்கப்படுவார்கள். இப் போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் சைவத்தமிமிழ்பண்பாட்டு ஒழுக்கங்களுக்கு அமைந்த உடைகளை அணிந்து வரவேண்டும் என்றுவேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்கள் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில்அடுத்த மாதம் 8ம் திகதி நடைபெறும் சிவராத்திரி விழாவின்போது வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு திட்டமிட்ட ஆரம்பக் கல்வி தேவை"

[சாவகச்சேரி]

''பாலர் பாடசாலைகள் மூலம் எமது எதிர்காலச் சந்ததியினரை அன்புள்ளம் கொண்டவர்களாகவும், உண்மை, நேர்மை, அறவழியைத் தமது கொள்கையாக வும் கொண்டுசெயல்பட வைப்பதே, அறவழிப்போராட்டக் குழுவின் பாலர்பாடசாலைத் திட்டத்தின் முச்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.''

இவ்வாறுஅறவழிப்போராட்டக் குழுவின் பாலர்பாடசாலை இயக்குனரான திரு. வீ எஸ். துரைராஜா, அறவழிப் போராட்டக்குழுப் பணிமனையில் அண்மையில் நடைபெற்ற பாலர்பாடசாலை ஆசிரியைகள் மத்தியில் உரையாடும் போது கூறினர்.

செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. துரைராஜா தொடர்ந்து பேசும்போது: ''பாலர் பாடசாலையில் இளம் குழந்தைகளுக்குப் புகட்டப்படுகின்ற ஆரம்பக்கல்விதான், குழந்தைகளின் எதிர்காலக்கல்விவளர்ச்சிக்கும், ஆவலுக்கும் அடிப்படையாக விளங்குவதாகும். நன்கு திட்டமிட்ட, ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவததினையும். உணர்ந்து கொண்டுள்ள அறவழிப்போராட்டக் குழு இவ்வருட ஆரம்பம் முதல் சுமார் 25 பாலர் பாடசாலைகளை நடாத்துகின்ற பணியை ஆரம்பித்துள்ளது இப் பாடசாலைகளில் கல்விபயில்கின்ற பிள்ளைகளுக்கு சர்வதேசதரத்துக்கு ஒப்பான சமாதானக் கல்வியும் புகட்ட நாம் ஏற்பாடுகள் செய்துவருகின்றோம்'' என்றும் கூறினர்

இக்கூட்டத்தில் இயக்குனர் திரு எஸ் தங்கராஜா, ஆசிரியர் கே. பரந்தாமனும், கருத்திரைகள் வழங்கினர்கள்.

## மற்றுமொரு சம்பவம்

[வவனியா]

வவனியா - பூவரசங்குளப் பகுதியிலுள்ள கண்ணாட்டி என்னுமிடத்தில் நேற்று ரோந்துசென்ற ஆயுதப்படையினரின் வாகனங்களுக்கு வைக்கப்பட்ட கண்ணிவெடிச் சம்பவத்தில் ஏற்பட்டுள்ள சேதவிபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதற்குப்பதிலடியாக ஆயுதபடையினர் அண்மித்த பகுதிகளில் வாழும் அப்பாவி ஏழை மக்களின் குடிசைகளுக்குத் தீ வைத்ததாகவும், துப்பாக்கிய ல் சூட்டதில் பலர்கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் பூவரசங் குளப்பகுதியில் ஆயுதப்படையினர் நடாத்திய தேடுதலின் போது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டனர்; நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். [மா]

## நெல்விலை வீழ்ச்சி

(பரந்தன்

பெரும்போக நெல் அறுவடை. கிளிநொச்சி பிரதேசத்தில் ஆரவாரமாக ஆரம்பமாகிபுள்ளது வருடந்தோறும்மட்டக்களப்பில் இருந்து வருகை தரும் முஸ்லிம் தொழிலாளர்கள் இம்முறை வருகை தராததால் உள்ளூர் கூலித்தொழிலாளர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

அண்மையில் 360/- ரூபாவாக இருந்த ஒரு மூடை நெல்லின் விலை தற்போது 280/- ரூபாவாக குறைந்துள்ளது இது விவசாயிகளை சோர்வடையச் செய்துள்ளது. விவசாயிகள் காலம் பிந்திய மழை காரணமாக பல தடவைகள் மீள விதைக்கும் நிலைக்கு உட்பட்டிருந்தார்கள்இதனல் பெருஞ் செலவு ஏற்பட்டிருந்தது இம்முறை ஏககருக்கான விளைவும் பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது சராசரி 75 புசல் விளைவு காணும் வயல்களிலும் இம்முறை சராசரி 45 புசல்வரையிலேயே விளைவு பெறக்கூடியதாகவிருந்தது.

கடந்தமூன்றுவருடங்களாக பருவமழை மாறுபாடு அடைவது காரணமாக விவசாயிகள் தொடர்ந்து நஷ்டமடைந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# "ஜனநாயக விரோத அடக்குமுறை ஆட்சியைத் தொடரமுடியாது"

## சிறிமா கூற்று

[கொழும்பு]

"ஜனநாயக விரோத அடக்குமுறை ஆட்சியைத் தொடர்ந்தும் நடத்தமுடியாத அளவுக்கு ஐ.தே.க. அரசாங்கம் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்த நிலையிலுள்ளது."

மஹரகமவில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் பேசுகையில் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

"1977ல் ஒன்பது மாகாணங்களைக்கொண்ட இலங்கையின் அதிகாரத்தை ஐக்கிய தேசிய கட்சி கைப்பற்றியது. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள்மீது இன்று அதிகாரத்தைப் பிரயோகிக்கும் சக்தி அரசாங்கத்துக்கு இல்லை. அதேபோல ஒரு சூழல் மலையகத்திலும் உருவாகிவருகின்றது. ஜனாதிபதிக்குப் புத்திமதி சொல்லுகின்ற ஒரு அந்தஸ்து அமைச்சர் தொண்டமானுக்கு வழங்கப்பட்டுள்ளது" என்றும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

# பருத்தித்துறை இன்று வழமைக்கு திரும்புகிறது

[புலோலி நிருபர் திருச்செல்வம்]

பொதுமக்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்து பருத்தித்துறை நகரத்தை இன்று திங்கட்கிழமை தொடக்கம் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளைப்பருத்தித்துறைப் பிரஜைகள்குழு மேற்கொ..ளவுள்ளது.

பருத்தித்துறையின் இன்றைய நிலைபற்றி ஆராய்வதற்கான கூட்டமொன்று பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவினால் பருத்தித்துறை பர்வதவர்த்தனி கலாமண்டபத்தில் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரஜைகள் குழு உறுப்பினர்கள், விழிப்புக் குழு உறுப்பினர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், அரச அலுவலகங்களின் ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், ப.நோ.கூ. சங்கத்தினர் உட்படப் பலபொது மக்கள் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை நகரின் இன்றைய நிலைபற்றியும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கருத்துக்களைத் தெரிவித்தனர். இதனையடுத்தே பருத்தித்துறை நகரை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் முதற்கட்டமாக, புலோலி கமநலச் சேவை நிலையத்திற்கு மாற்றம்செய்யப்பட்ட பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையை உடனடியாகப் பருத்தித்துறை நகரில் பணிமனை முன்னர் இயங்கிய கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பருத்தித்துறை மக்கள் வங்கியை இடமாற்றப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளதை நிறுத்தி வங்கி மீண்டும் பழைய கட்டிடத்திலேயே இயங்கச்செய்யவேண்டும் இலங்கை வங்கியும், தேசிய சேமிப்பு வங்கியும் பழையகட்டிடங்களிலேயே இயங்கவேண்டும். பருத்தித்துறை பஸ் நிலையத்திலுள்ள வட பிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறை சாலை நேரப்பதிவாளர் அலுவலகம் திறக்கப்படவேண்டும், சகல பஸ் சேவைகளும் பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும். பருத்தித்துறை பொதுசன மரக்கறிச் சந்தை, மீன் சந்தைகள் பழைய இடங்களிலேயே கூட நடவடிக்கை எடுக்கவேண்டும். பருத்தித்துறை மினிவான் சேவைகள் மினிவான் நிலையத்திலிருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும். பருத்தித்துறை நகரின் வர்த்தக நிறுவனங்களைத் திறந்து வர்த்தக முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். பருத்தித்துறை கல்லூரிவீதியில் இயங்கி வரும் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தை நகர்ப் பகுதிக்கு மாற்ற ஆவனசெய்ய வேண்டும் என்றும், இந்நடவடிக்கைகளுக்கான சகல முயற்சிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

பருத்தித்துறை நகரிலிருந்து மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் மாற்றம் செய்யப்படுமானல் மக்களுக்கு ஏற்படும் பேராபத்துப்பற்றிச் கூட்டத்தில் கலந்துகொண்ட பலர் விளக்கமாகத் தெரிவித்தனர். பருத்தித்துறை மக்கள் வங்கியை இடம் மாற்றுவதற்கு மக்கள் வங்கியினர் பொருட்களை லொறியில் ஏற்றுவதற்குக் கடந்த சனிக்கிழமை முயற்சித்தபோது பிரஜைகள் குழுவினரும், பொதுமக்களும் தடுத்து நிறுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

## கண்காட்சி

(வண்ணார்பண்ணை)

வடமாகாண பிரதேச மூலவள உற்பத்தி அபிவிருத்தி தொடர்பான பொருளாதார அபிவிருத்திக் கண்காட்சி ஒன்று இம்மாதம் 21ம், 22ம். 24ம் திகதிகளில் யாழ். நகரில் நடைபெறவிருக்கிறது

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவிருக்கும் இக்கண்காட்சியில் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் உற்பத்திகள் தொடர்பான விடயங்கள் இடம்பெறவுள்ளன. மாணவர்களும், உற்பத்தியாளர்களும், பாவனையாளர்களும் பயன்படும்வகையில் இக்கண்காட்சி நடைபெறுகிறது.

யாழ் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றம் இதனை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறது.

## நாளை திறப்புவிழா

(புலோலி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் பிரிவுக்கான வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் நாளை 18-ம் திகதி யாழ். கல்விப் பணிப்பாளராகவிருந்து வலயப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள திரு. எம். சிமியாம்பிள்ளையால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு எஸ்.ரேய் காந்தராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவிலே யாழ். கல்வியதகாரி திரு. வி. தங்கராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்

கல்வி அமைச்சினால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டுள்ள பாண்ட்வாத்திய கருவிகளும் திரு. சிமியாம்பிள்ளையினால் கையளிக்கப்பட்டு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

# அபாய நிலையில் போக்குவரத்து

## திருத்தவேலை ஆரம்பம்

[வண்ணார்பண்ணை]

நேற்று முன்தினம் மர்மமான முறையில் சங்கிலிஉடைந்து சேதமடைந்திருந்த பண்ணைத் தாம்போதி சங்கிலிப் பாலம் இன்னமும் சீர்செய்யப்படாத நிலையில் மரக் கட்டைகளின் உதவியுடன் கேடர்கள் தாங்கப்பட்ட நிலையில் வாகனப் போக்குவரத்துக்கள் மீண்டும் நேற்றுமுன் தினம் நடைபெற்றன.

இப் பாலத்தின் அடித்தள கேடர்கள் உக்கியநிலையில் இருப்பதாகவும், இப்பாலத்தின் மேல்தளத்தைத் தாங்கி நின்ற சங்கிலியும், இரும்புக் கேடர்களும் சேதமடைந்த நிலையில் உள்ளதாகவும் பொது மக்கள் புகார் செய்துள்ளனர்.

பெருந்தெருக்கள் திணைக்கள பொறியியலாளர்கள் நேற்று இதைப் பார்வையிட்டு திருத்த வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிளிநொச்சியிலும் பூரண ஹர்த்தால்

[கிளிநொச்சி]

கிளிநொச்சியிலும் இம்மாதம் 27-ம் திகதி முழுஅளவில் ஹர்த்தால் நடைபெறவிருக்கிறது.

இந்த நடவடிக்கைகளுக்கு இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு அமைப்புகளும், தொழிற் சங்கங்களும், பிரஜைகள்குழுக்களும், மாணவர் அமைப்புக்களும் ஆதரவு வழங்கமுன்வந்துள்ளன.

இதேவேளை கிளிநொச்சியிலுள்ள மாதர்களை ஒன்றிணைத்து அன்னையர் முன்னணி ஒன்றை உருவாக்கவும், அதன் மூலம் மாவட்டதில் வலுவான போராட்ட அமைப்பை வெகுஜன இயக்கங்களுடன் சேர்ந்து நடத்தவும் சில முக்கியஸ்தர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அடுத்த வாரம் கிளிநொச்சியிலுள்ள 27 அமைப்புக்கள் கூடி இதுதொடர்பாக இறுதி முடிவெடுக்கும்.

## 'ஹலோ, உங்களைத்தான்!'

[மாவிட்டபுரம்]

புதிய தொலைபேசி இணைப்பைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்கள் தமது பெயர் தொடர்ந்தும் பட்டியலில் இருக்கவேண்டுமானல் 250 ரூபா கட்டணம் செலுத்தி பதிவை புதுப்பிக்க வேண்டுமென விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்தவர்கள் மத்தியில் பெரிதும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் ஏற்கனவே பல ஆண்டுகளாக தொலைபேசி இணைப்புப் பெறுவதற்காக விண்ணப்பித்த ஏராளமானோர் இன்னமும் ஏமாற்றத்துடன் காத்திருக்கின்றனர்.

இது தவிர தற்போதைய சூழ்நிலையில், யாழ் நகரில் உள்ள நேரடித் தொலைபேசியை விட ஏனையபகுதிகளில் தொலைபேசி இணைப்புகள் பெரிதும் சீர்குலைந்துள்ளன. தொலைபேசி கம்பிகள் அறுக்கப்பட்டு கம்பங்கள் வெறுமனே காட்சியளிக்கின்றன.

வலி. வடக்குப் பகுதியில் பல மாதங்களாக தொலைபேசி இணைப்புகள் செயலிழந்து கிடக்கின்றன.

இந்நிலையில் தொலைதொடர்புத் திணைக்களம் வெளியிட்டுள்ள மேற்படி அறிவிப்பு தொலைபேசி பாவனையாளர் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தொலைபேசி இணைப்புக்கள் சீர் இல்லாத நிலையில் அவசர அலுவல்களுக்கு அதனை உபயோகிக்க முடியாமல் உள்ளது. இந்நிலையில் தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்தவர்கள் நம்பிக்கை இழந்துள்ளதாகவும் மேற்படி கட்டணம் குறித்த அறிவிப்பு மேலும் அவர்களை குழப்பியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வலி வடக்குப் பகுதியில் முன்னர் தபால் நிலையங்களில் இருந்து "நீடிப்பு" என்ற வகையில் உப இணைப்புக்கள் பெற்றிருந்தவர்களுக்கும் கூட இவ்வாறன கட்டணம் பற்றிய அறிவிப்பு அனுப்பப்பட்டமை பெரும் ஆச்சரியத்தை உண்டு பண்ணியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கந்தமுருகேசன் சிலை

[புலோலி]

புலோலிச் சந்தியில் சிதைவடைந்த நிலையில் இருக்கும் தென் புலோலியூர் தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரின் சிலை புதுப் பொலிவு பெற்று வருகின்றது.

இச்சிலை கடந்த பலமாதங்களுக்கு முன்னர் விஷமிகளால் சேதப்படுத்தப்பட்டு சிதைவடைந்து காணப்பட்டது. இப்பெரியாரின் இச்சிலையை திருத்திப் புதுப்பொலிவுபெறச் செய்யும் நடவடிக்கைகளை முன்னாள் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபைத் தலைவர் திரு. கே. வி. செல்வராஜன் மேற்கொண்டுள்ளார்.

மரண அறிவித்தல்

### சுந்தரம் ஜெயச்சந்திரன்

(பொறியியலாளர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு)

அச்சுவேலியைச் சேர்ந்த இவர் திரு. திருமதி சுந்தரம் வாலாம்பிகை அவர்களின் சிரேஷ்ட புதல்வரும், "சகு"வின் அன்புக் கணவரும், ராஜதீபன், பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாலச்சந்திரன் (கட்டிடத் திணைக்களம், யாழ்ப்பாணம்), விமலச்சந்திரன் (யாழ். இலங்கை வங்கி), ஞானச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(C 823)

### திருமதி அன்னம்மா சங்கரப்பிள்ளை

திருமதி அன்னம்மா சங்கரப்பிள்ளை காலமானர். இவர் காலஞ்சென்ற நாகமுத்து சங்கரப்பிள்ளை (இளைப்பாறிய மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகராஜா, சிவகாமிப்பிள்ளை, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அருமைத் தாயாரும், சங்கரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் அவர்களின் அன்பு மாமியாரும், பாலதேவி, சுமணதேவி, சிவபாலன், தனபாலசிங்கம் ஆகியோரின் அருமைப் பேத்தியாரும், நாகலிங்கம், காலஞ்சென்ற செல்லம்மா, பொன்னம்மா, தம்பையா, சின்னத்துரை, கண்ணம்மா, கனகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் 17-2-86 (இன்று) திங்கட்கிழமை பி. ப. 2 மணியளவில் சண்டிலிப்பாய் வடக்கிலுள்ள அன்னரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச. பாலசுப்பிரமணியம், சண்டிலிப்பாய் வடக்கு.

(C 820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org